வருட சந்தா ரூ 3 Regd. No. M. 24[illegible]

# மாத்வமித்திரன்.

# The Madhwa Mitran.

Editor, Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| | | |
|---|---|---|
| Vol 5 | ஸ்ரீமுக ஸம்வத்ஸரம் சைத்ர மாஸம் | No 9 |
| புஸ்தகம் 5 | பௌர்ணமி (10—4—33.) | நெ 9 |


| நெ. | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீதாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 249 |
| 2. | சங்கரலீலா விலாசம் (ஸ்ரீமான் H. சுப்பராவ்) | 257 |
| 3 | மணிமஞ்ஜரி (ஸ்ரீநாராயணபண்டிதாசாரியார்) | 261 |
| 4. | அளவியின் மகிமை (ஸ்ரீமான் கா.பே. ஸ்ரீனிவாசாசாரியார்) | 265 |
| 5. | மதிப்புரை | 268 |
| 6. | செய்தித்திரட்டு. | 270 |
| 7 | [illegible]தீர்த்தாிகள் தேவாம்சமே | 272 |
| | [illegible] வைபவம் | 276 |
| | [illegible]னைங்கள். | 280 |

N33-5-9

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

பதினேழாவது அத்யாயம்.

(காபிரைட் முன் தொடர்ச்சி.)

(ஸ்ரீமவே பாகவத ரங்கநாதாசாரியார் மொழி பெயர்ப்பு.)

---

ஸ்யமந்தகமாணிக்யத்தையும் ஸ்ரீகிருஷ்ணருக்குக் கொடுத்து மன்னிப்புக்கேட்டு நமஸ்காரம் செய்தான். ஸ்ரீகிருஷ்ணர் அந்த ஸ்யமந்தகமாணிக்யத்தை மறுபடியும் ஸத்ராஜித் ராஜனுக்குக் கொடுத்தார். ஸ்ரீகிருஷ்ணர் ஸத்யபாமா தேவியுடன் ஸந்தோஷமாயிருந்தார். பூதேவி என்ற இரண்டாவது ரூபமுள்ள லக்ஷ்மீ தான் ஸமஸ்த லோகத்து ஸௌந்தரியான உத்தமியான ஸத்ராஜித் ராஜனுடைய மகளாய் ஸத்யபாமை என்று பிறந்தாள். லக்ஷ்மீ தேவியின் அவதாரமாயிருப்பதால் ஸத்யபாமை ருக்மணி இவர்கள் ஸ்ரீகிருஷ்ணனுடைய பத்னிமார்கள். ஸ்ரீகிருஷ்ணருடைய பத்னிமார்களில் இவ்விருவர்கள்தான் ஸ்ரீகிருஷ்ணருக்கு மிக்க ப்ரியமானவர்கள். லக்ஷ்மீ எப்போதும் பகவானை விட்டுப் பிரியாதவளாதலால் இந்த ருக்மணி ஸத்யபாமா இவ்விருவர்கள் ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து எப்போதும் விட்டுப்பிரியாதவர்கள். ரோகிணி என்ற ஜாம்பவதி பிரம்மாவின் அம்சம் கொண்டவனும் ஸௌப்ரம்மண்யரின் அவதாரமுமான ஸாம்பனென்ற மகனை ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியால் அடையப்பெற்றாள்.

2087014

## ஹம்ஸடிபிகவதம்.

இப்படி எண்ணில்லா ஸத்குணங்களுக்கு கடலான ப்ரபுவான ஸ்ரீகிருஷ்ணர் ஸகலஜகத்தையும் ஸம்ரக்ஷித்துவரும்பொழுது ஒருஸமயம் ஒரு ப்ராம்மணன் த்வாரகா நகரத்திற்கு வந்தான். விஷ்ணுபக்தனான ஜநார்த்தனனென்ற அந்த ப்ராம்மணன் ஸ்ரீகிருஷ்ணரால் மரியாதைப்பெற்று ஸ்ரீகிருஷ்ணரைப்பார்த்துப் பேசினன். ஹே ப்ரபுவே! நான் மிக்க பாபிஷ்டமான வார்த்தையைச் சொல்லுகிறேன். அந்த என் வார்த்தைக்காக என்னை மன்னிக்கவேண்டும்: நான் மகா பாபிகளுக்கு தூதனாய் வந்திருக்கிறேனாதலால் என் வார்த்தை மிக்க பாபமுள்ளதாய் இருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணா! தங்களுக்குத் தெரியாதது யாதொன்றுமில்லை. ஆயினும் தங்களுடைய ஆக்ஞை ஆனால் அந்த வார்த்தையைச்சொல்லுகிறேன். இப்படி அந்த ஜனார்த்தனனென்ற பிராம்மணன் விக்ஞாபனம் செய்துகொள்ளவும் ஸ்ரீகிருஷ்ணர் அதைச் சொல்லுங்களென்று வற்புறுத்தினர். அப்பொழுது அந்த பிராம்மணர் ஸ்ரீகிருஷ்ணரைப்பார்த்து இவ்வாறு பேசினர். என்னவென்றால் ஸால்வ தேசாதிபதியான ப்ரம்மதத்தராஜனுக்கு சிவபக்தர்களான இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். தந்தையான ப்ரம்மதத்தராஜனின் தபோ பலத்தாலும் சிவனுடைய ப்ரஸாதத்தாலும் பிறந்த அந்த ஹம்ஸடிபிகர்களென்ற பிள்ளைகள் தங்கள் தபஸ் சக்தியால் ஒருவராலும் கொல்லமுடியாமலும் ஜயிக்கமுடியாமலும் இரண்டு வரன்களை சிவனிடமிருந்து பெற்றார்கள். ஜராஸந்தனுக்கு அவர்கள் முக்ய சிஷ்யர்கள். அவர்களுடைய தபஸ் சக்தியால் மகிழ்ந்த பரமசிவன் அவர்கள் ஸகாயத்தின்பொருட்டு மஹோதரன் குண்டதாரி என்ற இரண்டு பூதங்களைக் கொடுத்தார். அந்த இரண்டு பூதங்கள் மரணமில்லாதவர்களாயிருந்தாலும் அவர்கள் அந்த ஹம்ஸடிபிகர்களுக்கு ஸகாயமாயிருக்கும்பக்ஷத்தில் ஒருவராலும் அவர்கள் ஜயிக்கமுடியாதவர்களாவார்கள். அப்படி அவர்கள் ஹம்ஸடிபிகர்களுக்கு ஸகாயம் செய்யாதிருந்தால் அவர்களுக்கு அஜேயத்வமிருந்திருக்காது. ஹம்ஸடிபிகர்கள் பரமசிவனிடமிருந்து அஜேயத்வம் அவத்யத்வம் ஆகிய இந்த வரன்



களை சம்பாதித்து மதத்தால் கர்விஷ்டர்களாய் அவர்களுடைய தந்தையான ப்ரம்மதத்தராஜனுக்கு ராஜசூய யாகத்தை நடத்த வேண்டுமென்று அபேக்ஷிக்கின்றனர். இவர்களுக்கு ஜராஸந்தன் குருவாதலால் இந்த ராஜசூயயாகவிஷயத்தில் அவன் விரோதம் செய்ய விரும்புவதில்லை. ஹம்ஸடிபிகர்கள் தேவர்களின் கக்ஷியைச் சேர்ந்த அரசர்களை விசேஷமாய் ஜயித்து ராஜஸூய யாகத்தைச்செய்ய விரும்புகின்றனர். வேதத்தை அறிந்த பிராம்மணர்கள் ராஜஸூயயாகம் விஷ்ணுவை தேவதையாகக்கொண்டதென்று சொல்வதால் ஹே ஈசனான கிருஷ்ணா! சிவபக்தனான ஜராஸந்தன் சுயம் அந்த யக்ஞத்தைச்செய்ய விரும்புவதில்லை. இந்த ஹம்ஸடிபிகர்கள் அவர்களுடைய தந்தைக்கு கீர்த்தியை உண்டாக்கவிரும்புகிறவர்களாய் உனக்கு அவமானத்தை உண்டாக்க விஷ்ணு தேவதாகமான யக்ஞத்தைச்செய்ய அபேக்ஷிக்கின்றனர். அந்த டிபிகர்கள் உங்களுக்கு அறிவிப்பதென்னவெனில் கிருஷ்ணா! நீ ஸமுத்திரத்தை ஆசிரயித்தவனாதலால் லவண ஸமுத்திரத்திலுள்ள ரத்னங்களின் அநேக பாரங்களை (இருபது தொலா ஒருபாரம்) எடுத்துக்கொண்டு எங்களிடம்வந்து சேர் என்றிவ்வாறு சொல்லியனுப்பியிருக்கிறார்கள். கிருஷ்ணா! இந்த என்னுடைய வார்த்தையை மன்னிப்பீர்களாக. இவ்வாறு ஜனார்த்தனனென்ற பிராம்மணன் சொல்லி ஸ்ரீகிருஷ்ணரை நமஸ்கரித்தான். அப்பொழுது யாதவர்களெல்லோரும் இந்த வார்த்தையைக்கேட்டு குல்லென்று சிரித்தனர். அப்பொழுது மேக கர்ஜனைபோலுள்ள த்வனியுள்ள கிருஷ்ணர் ஸாத்யகியைப்பார்த்து பேசினர். ஹே ஸாத்யகி! இந்த ப்ராம்மணருடன் ஹம்ஸடிபிகர்களிடம் போ. அரசர்களில் அதமர்களான ஹம்ஸடிபிகர்களிடம் இந்த என் வார்த்தையைச் சொல். உங்களிடம் நான் வந்து நிச்சயமாய் ஆயுதங்களால் கப்பங்கட்டுகிறேன். யுத்தத்தை அபேக்ஷிப்பவர்களான நீங்கள் புஷ்கர தீர்த்தத்திற்கு வாருங்கள் என்று சொல் என்றார். இவ்வாறு கிருஷ்ணர் சொல்லவும் ஸாத்யகி அந்த பிராம்மணருடன் த்வாரகையினின்றும் புறப்பட்டான். பலிஷ்டனான ஸாத்யகி ஹம்ஸடிபிகர்களிடம்வந்து ஸ்ரீகிருஷ்ணர் சொன்ன வார்த்தையைச்சொன்னான். அந்த

ஸாத்யகி ஹம்ஸடிபிகர்களை தன்னுடைய வர்த்தையால் துரும்பாய் அவமதித்து ஸ்ரீகிருஷ்ணரிடம் திரும்பிவந்தான். ஸ்ரீகிருஷ்ணரிடம் தூதனை அனுப்புவதற்முன் இந்த ஹம்ஸடிபிகர்கள் ருத்திரருடைய அவதாரமான துர்வாஸரென்ற பிராம்மணரை துரும்பாய் அவமதித்தனர். ஸர்வக்ஞரான துர்வாஸமகரிஷி மூவாயிரம் யதிச்ரேஷ்டர்களுடன் ஹம்ஸடிபிகர்களால் கோமணம் முதலான எல்லா அவர்களுடைய சாமக்ரிகளும் நாசமாக்கப்பட்டவர்களாயினர். அந்த துர்வாஸரிஷியே சிவரூபத்தால் அந்த ஹம்ஸடிபிகர்களுக்கு ஒருவராலும் கொல்லப்படாதிருக்கும் வரனை கொடுத்திருப்பதால், அவர்கள் இவருடையவும் இவரைச்சேர்ந்தவர்களுடையவும் கௌபீனங்களைக் கிழித்து தண்டம் கமண்டலுக்களை முறித்தும்கூட அவர்களுக்குசாபம் கொடுக்கமுடியவில்லை. பிறகு துர்வாஸர் ஸமஸ்தர்களையும் பங்கப்படுத்துவதில் மேலான சக்தி படைத்தவரான ஸ்ரீகிருஷ்ணரிடம் வந்தார். ரமாபதியான ஸ்ரீகிருஷ்ணர் அந்த மூவாயிரம் ஸன்யாஸிகளையும் அர்ச்சித்து அவர்களுக்கு உத்தமமான தண்டங்கள் கமண்டலுகள் கௌபீனங்கள் முதலான ஸாமக்ரிகளைக்கொடுத்து அந்த ஸன்யாஸிகளுடன்கூடி ஹம்ஸடிபிகர்களைக் கொல்வதற்காக புஷ்கரத்திற்கு பிரயாணம் செய்தார். ஜராஸந்தன் அத்ரிரிஷியின் குமாரரான துர்வாஸர் பரமசிவனுடைய அவதாரம் என்றறிந்தவனாதலால் அவனுடைய சிஷ்யர்களான ஹம்ஸடிபிகர்கள் துர்வாஸமகரிஷிக்கு விரோதம் செய்தனரென்று கேட்டு அவர்களை கைவிட்டுவிட்டான். யதீசுவரர்களுடன்கூடி ஸ்ரீஹரி புஷ்கரதீர்த்தத்திற்கு வந்தவுடன் ஹம்ஸடிபிகரிருவர்களும் புஷ்கரதீர்த்தத்திற்கு வந்தனர். அவருடைய தந்தையான ப்ரம்மதத்தராஜனும் வந்துசேர்ந்தான். பரமசிவனின் எதிரில் போகும் மகோதரன் குண்டதாரி என்ற இரண்டு பூதங்களும் வந்துசேர்ந்தன. முன்பு பிரம்மாவிடமிருந்து யாவராலும் கொல்லப்படமுடியாததும் ஜயிக்கப்படமுடியாததுமான வரனைப்பெற்று தேவர்களை ஹிம்சிக்கும் விசக்ரனென்ற அஸுரன் ஹம்ஸடிபிகர்களுக்கு சிநேகிதனாயிருந்தான். இவர்களுக்கு யுத்தத்தில் ஸஹாயம் செய்ய வேண்டுமென்று அவன் புஷ்கரத்திற்கு வந்தான். முன்பு ஹிடிம்ப



னென்ற ராக்ஷஸன் பரமசிவனை தவத்தால் ஸந்தோஷப்படுத்தி நீ யாராலும் அபஜயம் பெறப்போவதில்லை. கொல்லப்படவும் போவதில்லை என்று பரமசிவனிடமிருந்து வரனை ஸம்பாதித்தான். அந்த ஹிடிம்பாஸுரன் இந்த ஹம்ஸடிபிகர்களுக்கு சிநேகிதனானான். அவன் இந்த புஷ்கரத்திற்கு யுத்தத்திற்கு வந்தான். ஹம்ஸடிபிகர்களுக்கு ஸைனியம் பத்து அக்ஷௌஹிணியிருந்தது. விசக்ராஸுரனுடைய அஸுரஸைனியம் ஆறு அக்ஷௌஹிணி. ஹிடிம்பாஸுரனுடைய ராக்ஷஸ ஸைனியம் ஒரு அக்ஷௌஹிணி. ஆக 19 அக்ஷௌஹிணி ஸைனியத்தை அழைத்துக்கொண்டு ஹம்ஸடிபிகர்கள் கிருஷ்ணனிடம் யுத்தத்திற்கு வந்தனர். கிருஷ்ணர் ஹம்ஸடிபிகர்களிடம் வந்தார். பிறகு ஜோடிஜோடியாய் த்வந்த யுத்தம் நடந்தது. கிருஷ்ணர் விசக்ராஸுரனிடம் வந்தார். பலராமன் கர்விஷ்டனான ஹம்ஸனிடம் வந்தான். அப்பொழுது ஸாத்யகி ஆயுதபாணியாய் டிபிகனிடம் யுத்தத்திற்கு வந்தான். முன்ஜன்மத்தில் வைகுண்டலோகத்தில் பகவானுக்கு தத்யோதனத்தை ஸமர்ப்பணம் செய்தவனும் கணங்களில் சேர்ந்தவனுமான சண்டனென்ற த்வாரபாலகன் கிருஷ்ணருக்கு தம்பியாய் ரோஹிணிதேவி குமாரனாய் கதன் என்று பிறந்தான். அந்த கதன் ஹம்ஸடிபிகர்களின் தந்தையான பிரம்மதத்தராஜனை யுத்தத்திற்கழைத்தான். அப்பொழுது மூன்று அக்ஷௌஹிணி ஸைனியங்களுள்ள எல்லா யாதவர்களும் ஹிடிம்பாசுரனுடன்கூடிய பரமசிவனின் வேலையாட்களான இரண்டு பூதங்களை தடுத்தனர். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணர் மகத்தான அஸ்திரசஸ்திரங்களை வர்ஷிக்கும் விசக்ராசுரனை அவருடைய பராக்கிரமத்தாலும், பாணங்களாலும் வாகனம் ஆயுதங்களில்லாமல் ஓர் க்ஷணத்தில் செய்து மீண்டும் மரங்களையும் மலைகளையும் விருஷ்டி செய்யும் விசக்ராஸுரனுடைய சிரஸ்ஸை சத்ரு சம்ஹாரனான கிருஷ்ணன், சக்ராயுதத்தால் கத்தரித்தார். அப்பொழுது தேவர்கள் ஸந்தோஷமடைந்து ஜயசப்தம் செய்தனர். புஷ்பவர்ஷம் செய்த பிரம்மாதிகளால் துதிக்கப்பெற்றவராய் ப்ரபுவான ஸ்ரீகிருஷ்ணர் யாதவர்களை பக்ஷிக்கும் சிவகிங்கரர்களுடன் யுத்தத்திற்கு வந்தார். அந்த இரண்டு பூதங்கள் எல்லா யாதவர்களையும் புஷ்

தத்தில் விரட்டி கிருஷ்ணருடைய சமீபத்திற்கு வந்து அவருடைய தோளின்மீது உட்கார்ந்துகொண்டு கிருஷ்ணருடைய அழகான காதுகளை கடித்தன. பலத்திற்கு சமுத்திரனான பகவான் தன்னுடைய புஜங்களை அசக்யவேகத்தால் அந்த இரண்டு பூதங்களை உதறி கைலாஸத்தில் விழும்படிச் செய்தார். அபரிமிதமான கிருஷ்ணருக்கு இந்த பூதங்களை கைலாஸத்திற்கு உதறி எறிந்தது என்ன ஆச்சரியம். யாதவ சைனியத்தை தன்னுடைய பலத்தால் பக்ஷிக்கும் கர்விஷ்டனான ஹிடிம்பாசுரனிடம் கிருஷ்ணருடைய தந்தையான வசுதேவர் உக்ரசேன ராஜனுடன் சேர்ந்து பாணவர்ஷம் செய்துகொண்டு யுத்தத்திற்கு வந்தார். அப்பொழுது பலிஷ்டனான ஹிடிம்பாசூரன் உக்ரஸேனன் வசுதேவன் இவ்விருவர்களின் ஆயுதபூர்ணமான ரதங்களை விழுங்கிவிட்டு அந்த இரண்டு கிழவர்களை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு என் வாயிக்குள் நீங்கள் சீக்கிரம் போய்விடுங்களென்றான். அப்பொழுது கதாயுதம் தரித்து ஹம்ஸனுடன் யுத்தம் செய்துகொண்டிருந்த பலராமன் ஹம்ஸனை விட்டு ஹிடிம்பாசூரனிடம் வந்தார். ராக்ஷஸராஜனான ஹிடிம்பாசுரன் யுத்தத்திற்கு வந்த பலராமரைப்பார்த்து உக்ரஸேனன் வசுதேவன் இவர்களை விட்டு கோபத்தால் பலராமனின் மார்பில் ஓர் முஷ்டிப்ரஹாரம் செய்தான். பாகுசாலிகளான இவ்விருவர்களும் முஷ்டியுத்தம் செய்தனர். பலராமர் வெகுநேரம் யுத்தம்செய்து அந்த ஹிடிம்பனின் கணக்கால்களை பிடித்தார். பிறகு கர்விஷ்டனான ஹிடிம்பாசுரனை தன் பலத்தைக்கொண்டு சுழற்றி வெகுதூரம் விட்டெறிந்தார். அந்த ஹிடிம்பாசுரன் ஒண்ணேகால் யோஜனை தூரத்தில் விழுந்தான். பிறகு பலராமரிடம் அவன் திரும்பி வரவில்லை. அவன் தன்ஸைனியத்திலுள்ள ராக்ஷஸர்களையும் ஹம்ஸடிபிகர்களையும் விட்டு வனத்திற்குச்சென்றான். ஹலாயுததாரியான பலராமர் ஹிடிம்பாசுரனைச் சேர்ந்த ராக்ஷஸர்களை ஸம்ஹரித்து கர்ஜித்தார். கிழவனான ப்ரம்மதத்தராஜனுடன் கதன் யுத்தம்செய்து அவனுடைய வாகனம் ஆயுதங்களை நாசம் செய்தான். பிறகு ப்ரம்மதத்தராஜன் ஓட்டம்பிடித்தான். ரதிகனான ஸாத்யகி ப்ரம்மதத்தராஜனுடைய இரண்டாவது மகனான டிபிகனுடன் யுத்தம்செய்தான்.



டிபிகனும் ஸாத்யகியும் இருவர்களும் உத்தமமான அஸ்திரசஸ்திரங்களால் யுத்தம் செய்துகொண்டு விளையாடினர். பலிஷ்டனான ஸாத்யகி ஹம்ஸனின் தம்பியான டிபிகனுடன் வெகு நேரம் யுத்தம்செய்து டிபிகனுடைய நூற்றைந்து தனுஸையும் யுத்தத்தில் சேதித்தான். டிபிகன் கத்திகேடயம் எடுத்துக்கொண்டு யுத்தத்தில் ஸாத்யகிக்கு அபிமுகமாய் வந்தான். பயமில்லாத ஸாத்யகி அவ்வாறே உத்தமமான கத்திகேடயமெடுத்துக்கொண்டு டிபிகனுக்கு அபிமுகமாய் வந்தான். சிரமமில்லாதவர்களான டிபிகன் ஸாத்யகி இவர்கள் 32 வகை உத்தம கத்தியுத்தத்தைக் காட்டிக்கொண்டு ஸமமாகவே வெகுகாலம் நின்றனர். ஒருவருக்கொருவர் இடைவெளியை பார்க்கவிரும்பியும் அவகாசத்தைக்காணவில்லை. பிறகு டிபிகன் ஸாத்யகி இவர்கள் இந்த யுத்தம் ஜயபராஜயமில்லாததென்று ஆலோசித்து யுத்தத்தைவிட்டுச் சென்றனர். பிறகு டிபிகன் ஹம்ஸனுடன் சேர்ந்து கிருஷ்ணரிடம் யுத்தத்திற்கு வந்தான். கிருஷ்ணர் அந்த ஹம்ஸடிபிகர்களை பாணங்களால் ஓர் க்ஷணத்தில் ஆயுதமில்லாதவர்களாய்ச் செய்தார். ஸைனியங்களில் நான்கில் ஓர் பங்கு பாக்கியிருக்கும்படி விட்டு மற்ற ஹம்ஸடிபிகர்களின் ஸைனியங்களை ஓர்க்ஷணத்தில் ஸம்ஹாரம் செய்தார். ஸ்ரீகிருஷ்ணரின் பயத்தால் ஹம்ஸடிபிகர்கள் புஷ்கரதீர்த்தத்தினின்றும் ஓடினர். பிறகு அநந்தகாந்தியுள்ள ப்ரபுவான கமலநேத்ரனான கிருஷ்ணர் தேவர்களால் துதிக்கப்பெற்றார். புஷ்கரதீர்த்தத்தில் பகவான் அன்றிரவு வாஸம்செய்தார். மறுநாள் ப்ரபுவான கிருஷ்ணர் யமுனாதீரத்திற்கு ஓடிப்போன ஹம்ஸடிபிகர்களை பின்பற்றினார். பலராமருடன் கூடிய கிருஷ்ணர் அவருடைய யாதவஸைனிய யுக்தராய் அவரால் பாக்கிவைத்திருக்கும் ஸைனியங்களுடன் ஓடிப்போன ஹம்ஸடிபிகர்களைத் தடுத்தார். அந்த ஹம்ஸடிபிகர்கள் அவர்களின் ஸைனியங்களுடன் திரும்பி மகாகோபத்துடன் ஸஹிக்கமாளாத பராக்கிரமமுள்ளவர்களாய் எல்லா யாதவர்களை சிரேஷ்டமான பாணங்களால் தடுத்தார்கள். மகாதனுர்தாரியான ஹம்ஸன் பிறகு பலராமரிடம் யுத்தத்திற்கு வந்தான். ஹம்ஸனுடைய தம்பியான டிபிகனோ ஸாத்யகி, கதன் மற்றும் எல்லா யாதவர்களுடன் யுத்தத்திற்கு வந்

தான். அந்த டிபிகன் ஸாத்யகி, கதன் இருவர்களையும் ஆயுதம் வாகனம் கவசமில்லாமல் செய்தான். ஸாத்யகி கதன் இவர்கள் யுத்தம்விட்டு ஓடிவிட்டனர். டிபிகன் ஸைனியத்திலுள்ள யாதவர்களை நாண் கட்டிய தனுஸ்ஸை எடுத்துக்கொண்டு கர்ஜித்துக்கொண்டு மகத்தான அஸ்திரசஸ்திரங்களை விருஷ்டிசெய்துகொண்டு ஸ்ரீகிருஷ்ணரிடம் யுத்தத்திற்கு வந்தான். சத்ருசம்ஹாரகனை கிருஷ்ணர் அந்த டிபிகனை அக்ஷணமே எல்லா யுத்த ஸாமக்ரிகளில்லாமல் செய்தார். அந்த டிபிகன் கிருஷ்ணரை விட்டு பலராமரிடம் யுத்தத்திற்குப் புறப்பட்டான். பலராமர் தன் ஸாமர்த்யத்தால் ஹம்ஸனை ஆயுதமில்லாமல்செய்து தனுஸ்ஸின் நாணை காதுவரை இழுத்துக்கொண்டு யுத்தத்திற்கு வந்த ஹம்ஸனுடைய தம்பியான டிபிகனைக்கண்டார். அந்த ஹம்ஸன் மீண்டும் தனுஸ்ஸை எடுத்துக்கொண்டு பலராமரிடம் யுத்தத்திற்கு வரும்பொழுது ஸ்ரீகிருஷ்ணர் தன்னுடைய பலத்தால் அந்த ஹம்ஸனைத் தடுத்தார். ஸாத்யகி டிபிகனை விட்டு மற்றொரு ரதத்தில் உட்கார்ந்து டிபிகனின் தந்தையான ப்ரம்மதத்தராஜனிடம் யுத்தத்திற்கு வந்தான். அதிவயோதிகனை ஹம்ஸடிபிகர்களின் தந்தையான பிரம்மதத்தராஜன் ஸாத்யகியுடன் யுத்தம் செய்தான். ஸாத்யகியின் நெஞ்சில் பாணம் போட்டான். அந்த ஸாத்யகி, பாணத்தால் அதிகம் அடிவிழுந்தவனாய் சீக்கிரம் மூர்ச்சையடைந்தான். பிறகு ப்ரக்ஞைவந்து எழுந்து அர்த்தசந்திரமென்ற பாணத்தை அம்பறாத்தூணியிலிருந்து எடுத்தான். பலிஷ்டனான ஸாத்யகி அர்த்தசந்திரமென்ற பாணத்தால் வெள்ளைமயிர்கொண்ட பிரம்மதத்தனுடைய சிரஸ்ஸை சேதனம் செய்தான். முன்காலத்தில் காசிராஜனுடைய மகளான அம்பாவால் எந்த தலை அபேக்ஷிக்கப்பட்டதோ அந்த ப்ரம்மதத்தராஜனின் தலை பூமியில் விழுந்தது. பிறகு கர்விஷ்டனான ஸாத்யகி சிம்ஹநாதம் செய்துகொண்டு கிருஷ்ணரின் பாரிசத்திற்கு வந்தான். பலராமர் ஸைனியங்களுடனிருந்த டிபிகனுடன் யுத்தம் செய்தார். ஸ்ரீகிருஷ்ணர் க்ரூரமான பாணங்களால் ஹம்ஸனை சங்கடப்படுத்திக்கொண்டு அவனுடைய எல்லா ஸைனியங்களையும் ஸம்ஹாரம் செய்தார்.

(தொடரும்.)



# சங்கரலீலா விலாஸம்.

(முன் தொடர்ச்சி.)

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்பாராவ் M.A., அவர்கள் எழுதுவதாவது:—

It tells us of an omnipresent, eternal, boundless and immutable principle on which all speculation is impossible since it is beyond the range of all thoughts and is both unthinkable and unspeakable. Then we have a right to say that we do not think that it is omnipresent or that eternal and immutable since such stuff is as bad as anything."

இந்த அத்வைதம் மனதிற்கும் வாக்குக்கும் எப்பவும் எட்டாத ஏதோ ஒரு தத்வமிருப்பதாய் அறிவிக்கிறது. அது எங்கள் மனதிற்கு சற்றும் எட்டாதிருந்தால் அதன் ஸ்வரூபமே எங்களுக்கு தெரிந்துவராமலிருக்கும்பக்ஷத்தில் அது வ்யாப்தமானதல்ல நித்யமானதல்ல, அநந்தமானதல்லவென்று ஏன் சொல்லலாகாது? ஏனெனில் அப்பேர்ப்பட்டதான சற்றும் அறியமுடியாததான பதார்த்தம் அத்யர்தம் ஹேயமானதுதான் என்றார். ஆகவே அத்வைதம் அவைதிகமென்றறிவிக்கக்கூடிய ப்ராம்மத்தின் விசாரம் சிறிது காட்டப்பட்டது.

## IV.

இனி மாயாவாதத்திற்கு அவைதிகத்தன்மை முதலான தோஷங்களிருப்பதை காட்டுகிறேன்.

நிர்குணப்ரம்மமென்ற ராஜனை வேதமாகிய ராஜகிருகத்தினின்றும் வெளியே இழுத்துப்போட்டுக் கொன்றுவிட்டாரென்று சொல்லியிருந்ததும். ஆனால் சாஸ்திரிகள் அப்படியே செய்துவிடவில்லை. அவருடைய அடங்காகோபத்திற்காளாகியும் கண்டபடி கண்ட ராஜ்யத்தை ஆக்கிரமித்திருக்கும் நிர்குணப்ரம்மமென்ற துஷ்டராஜனுக்கு உடனே மரணதண்டனை உசிதமல்லவென்று எண்ணி நீரயோசித்து இந்த ராஜனுக்கு சாசுவதமான சிறைவாஸத்தை ஏற்படுத்தியிருக்கிறார். கல்கத்தா இருட்டறையில் அநேகம் ஆங்கிலேயர்களை அடைத்த ஸுராஜ் தௌலாவின் யோசனையை ஒத்ததாகும்.

நிர்குண சின்மாத்ரனை ஸாக்ஷாத் பரப்ரம்மத்திற்கு மாயை சபரமாய் ஸம்பந்தமாயிருக்கிறதென்று சாஸ்திரிகள் சொல்லியிருக்கிறார்

இதோ! நிர்குணப்ரம்மத்திற்கு சாம்பசாஸ்திரிகள் கொடுத்திருக்கும் ஜெயில் ஆர்டரைப்போலுள்ள வார்த்தைகள், இதுவே:— "மாயை என்பது அக்னியிலுள்ள உஷ்ணம்போலும் சூரியனிடமுள்ள பிரகாசம் போலும் ப்ரம்ம சக்தியே தவிற வேறு பதார்த்தமல்ல. சக்திக்கும் சக்தியுள்ள பதார்த்தங்களுக்கும் வ்யவஹாரத்தில் பேதமிருந்தாலும் ஸ்வரூபத்தில் பேதமில்லை"

இந்த வாக்யங்களில் அக்னிக்கு உஷ்ணம் எப்படி இயற்கையானதோ, ஜலத்திற்கு சீதளம் எப்படி ஸ்வாபாவிகமோ, காற்றுக்கு வீசும் தன்மை எப்படியோ, பூமிக்கு காடிண்யம் எப்படியோ, இந்த சாஸ்திரிகளுக்கு பிறரை தூஷிப்பது எப்படி இயற்கையோ, அப்படித்தான் ஆகாசம் வாயு தேஜஸ் முதலான எல்லா பரிணாமங்களுக்கும் உபாதானமான மாயை ப்ரம்மஸ்வரூபமான தர்மம் என்று சொல்லிவிட்டார். உலகில் குற்றவாளிகளுக்கு சிறையில் காலில் விலங்கிடுவதுண்டு. கைகளுக்கு விலங்கிடுவதுண்டு. நிர்குணப்ரம்மத்துக்கு இந்த சிக்ஷைகளை கொடுப்பதில் சாஸ்திரிகளுக்கு திருப்தி இல்லை. சாஸ்திரிகள் நிர்குணப்ரம்மத்திற்கு யாதனா சரீரத்தைக்கொடுத்து, அவனுடைய வயிற்றுக்குள் நெருப்பை மூட்டி, அவனை உருக்குக்கோவையில் வைத்து சாஸ்திரிகளுடைய தபோமகிமையால் அவனுடைய சொரூபத்தை உருக்கி, அவனுடைய சுபாவத்திலேயே மாறுதலேற்படும்படி செய்து அவனை மண்ணாயும் கல்லாயும் ஜலமாயும் விஷ்டையாயும் பரிணமிக்கும்படி செய்துவிட்டார். சிறிது குற்றம் செய்த அஹல்யைக்கு சிலவருஷங்கள்மட்டில் கல்லாயிருக்கக் கூடிய தன்மையை கௌதமர் சிக்ஷை விதித்தார். விஷ்ணுவைஷ்ணவத்வேஷியும் வேதமாகிய ராஜ்யத்தை அபகரிப்பதிலேயே தாத்பரியங் கொண்டவனும் அயோக்யனுமான நிர்குணப்ரம்மத்தை, முக்கண்ணனையும் மீறிய சக்தியும் கோபமுமே மூர்த்திமானாகிய சாம்பசாஸ்திரிகள் அடிக்கடி கற்பாறையாகவே செய்திருக்கிறார். அவனை மண்ணாக்கினார். சாம்பலாக்கினார். ஒருதரம் அவனை அறைந்து பூமியில் வீழ்த்தி தேய்க்கிறார். பிறகு அவனை கிருகிருவென்று சுழற்றி வீசுகிறார். மற்றொருதரம் அவனுடைய சிண்டை பிடித்து தலையில் குட்டுகிறார். இவ்வளவாகியும் அந்த நிர்குணப்ரம்மத்தின் ப்ராணன்போவதில்லை. அவன் தத்தளிக்கிறான். மூர்ச்சையடைகிறான். சாஸ்திரிகளின் சொல்வேட்டைக்காளாகியிருக்கும் அந்த அயோக்யன் நிர்குணப்ரம்மன் மூவுலகில் எங்கே ஓடினால்தீரும்? என்ன அவன்? தப்புவானா? அவனுடைய கதி என்னவாயிற்று? நிர்குணப்ரம்மம் பூமியில் சாய்ந்தான். அவனுக்கு



அந்த அவஸ்தை அநாத்யநந்த காலத்தில் எப்போதும் நீங்கிய பாடில்லை. த்வைதிகள் விஷ்ணுத்வேஷிகளான சில துர்ஜனங்களுக்கு அந்தம்தமஸ்ஸாகிய நித்யநரகமுண்டென்று சொல்லுகின்றனர். சாஸ்திரிகளோ அவருடைய வேட்டையை உத்தேசித்து அந்தம் தமஸ்ஸையே தம்முடைய வசமாக்கிக்கொண்டுவிட்டு நிர்குணப்ரம்மத்தை அதில் வீழ்த்தி அங்கு அவன் அய்யோ! அப்பா! அம்மம்மா! ஊ! ஆ! என்று சொல்லவும் நீசனே! இது நாராயணனுடைய நாமங்கள். * உன்னை இந்த வார்த்தை காப்பாற்றாதென்று சொல்லிக்கொண்டே காலால் அவனை அறைந்து அதனாலும் திருப்தியடையாமல் கைதியான நிர்குணப்ரம்மத்தை ஹரதீ ஆசாரியார் முதலானவர்களின் சுவாதீனத்தில் ஒப்புவித்து துச்சாஸனன் த்ரௌபதியின் வஸ்திராபஹாரத்தால் மனஸ் திருப்தி பூரா அடையாமலிருந்தாலும் பிறகு சும்மா ஓய்வடைந்தபடி பள்ளிக்கூடத்து மாணவர்களின் மனஸ் திருப்தியடையும்படியான வேடிக்கை வார்த்தைகளாடி ஓய்வடைந்திருக்கிறார். வாசகர்களே! சாஸ்திரிகளின் தாத்பரியம் உங்களுக்கு விளங்கியிருக்கக்கூடும். ஜகத்பரிணாமி காரணமான மாயை என்பது பிரம்மனுக்கு ஸ்வாபாவிகமான தர்மமென்றார். அதனால் பிரம்மமே மாயை, பிரம்மம் மாயையின் பரிணாமம் என்று பொருள்படுகிறது. என்றால் பிரம்மமே ஆகாசம், பிரம்மமே வாயு, பிரம்மமே தேஜஸ், பிரம்மமே பிருத்வி, பிரம்மமே ஸப்தஸமுத்ரங்கள், பிரம்மமே மகாதமஸ், பிரம்மமே கோழி, பிரம்மமே குதிரை, பிரம்மமே கழுதை, பிரம்மமே பன்றி, பிரம்மமே வைதரணி நதியில் மூழ்கும் நரகயாதனை அடைகிறவன், பிரம்மமே தமஸ்ஸில் தவிக்கப்படுகிறவன், எல்லா ஸம்ஸாரமும் பிரம்மத்தின் ஸ்பாவம் என்பது சாஸ்திரிகளின் மதம். இப்பேர்ப்பட்ட தத்வம் சாஸ்திர நீதியாய் சாஸ்திரிகள் கண்டுகொண்டிருந்தால் இதல்லவோ ஸ்மார்த்த வாக்யார்த்தமென்று அவர் சொல்லியிருப்பார். ஐயோ பாபம்! சாம்பசாஸ்திரிகள் தவறி எழுதினால் ஸ்மார்த்த ப்ராம்மணர்கள் செய்த தப்பு என்ன? ஆகையால் நாம் ஸ்மார்த்த வாக்யார்த்தம் என்று சொல்லலாகாதுதான்

* [குறிப்பு:— நாராயணன் ஸர்வசப்தவாச்யனாகும்பக்ஷத்தில் மரணகாலத்தில் அய்யோ அப்பா, என்று சொன்னால் ஏன் முக்தி வருவதில்லை என்று கேட்கிறார். அந்த சப்தத்தால் அறிவிக்கப்படும் பகவத் குணங்களின் ஞானத்துடனுள்ள பக்தியால் நாராயணனை த்யானம் செய்து பிராணனை விட்டால் அந்த ஞானி முக்தனாவானென்பது சாஸ்திர ஸித்தாந்தம்.]

ஆனல் நாம் சொல்வதென்னவென்றல் சாம்பசாஸ்திரிகளுக்கு அத்வைததத்வம் சிறிதும் தெரியாதென்று சொல்லுகிறேம். மாயை என்பது ப்ரம்மத்தின் ஸ்வபாவமானது என்று அவர் வாதித்தது அவருடைய முட்டாள்தனத்தின் எல்லையை நன்கு விளக்குகிறது. இது அகாதமான விபரீத ஞானமே. மகா பாபமூலமான அப்ராமாணிகவாதமாகும்.

மாயை (அதாவது அவித்தை) ப்ரம்மத்தின் ஸ்வாபாவிகமென்றல் அதனல் ஏற்படும் முக்யமான சில தோஷங்களை எடுத்துக் காட்டுகிறேன்.

1. மாயை ப்ரம்மத்தின் ஸ்வாபாவிகமானல் மாயாத்மகமான இந்த எல்லா பிரபஞ்சமும் (அதாவது துக்கமயமான ஸம்ஸாரம்) ப்ரம்மத்துக்கு ஸ்வாபாவிகமானதென்று ஏற்படுகிறது.

2. ஸ்வாபாவிகஸ்ய அநபாயாத் என்ற நியாயானுஸாரம் ஓர் வஸ்துவின் சுவாபாவிகமான தர்மம் அந்த வஸ்து நாசமாகும்வரை நாசமாகக் கூடியதல்ல. மாயை பிரம்மத்தின் ஸ்வாபாவிகமானல் பிரம்மம் நித்யமானதால் மாயையும் நித்யமாகி எப்பொழுதும் பிரம்மத்தை விட்டுப் பிரிவதில்லை என்று ஏர்படுகிறது. அல்லது மாயை அநித்யமானல் பிரம்மமும் அநித்யமென்று ஒப்புக்கொள்ளவேண்டும். சில பிசாசுகள் தான் பிடித்த கர்பிணி ஸ்திரிகளைக் கொன்றுதான் அவர்களுடனே தான் அந்த சரீரத்தை விடுகின்றன. அநித்யமான மாயை பிரம்மத்திற்கு ஸ்வாபாவிகமானல் நிர்குணப்ரம்மத்தைக் கொன்றே அது நிவிருத்தியாகவேண்டும். ஸ்வாபாவிகமான தர்மமும் தர்மியும் எப்போதும் விட்டுப்பிரியாததம்பதிகள். ஆகவே ப்ரம்மம் மாயை இவை இரண்டும் அநித்யமானவை என்றவது நித்யமென்றவது ஏற்படுகின்றது.

3. மேலும் சாஸ்திரிகளின் இந்த நிரூபணத்தால் ஜகத் ஸத்யமென்றும் ஏற்படுகிறது. பிரம்ம ஸத்யம் என்று சாஸ்திரிகளே ஒப்புக் கொண்டிருக்கிறர். அப்பேர்பட்ட ஸத்யமான ப்ரம்மத்திற்கு ஸ்வாபாவிக தர்மமான மாயையும்கூட ஸத்யமென்றே ஏற்படுகிறது. ஆகையால் மாயாத்மகமான இந்த ஜகத் ஸத்யமே. அல்லது சுவாபாவிகதர்மமான மாயை அஸத்யமானல் தர்மியான பிரம்மமும் அஸத்யமாகவேண்டும். சாஸ்திரிகள் மாயை என்ற பெரிய பாறையை பிரம்மத்தின் கழுத்தில் கட்டியிருக்கிறர். அல்லது அவருடைய மந்திர சக்தியால் பெரிய பிசாசை ஆகர்ஷணம் செய்து பிரம்மத்தின் வயிற்றுக்குள்ளே அடைத்திருக்கிறர். மித்யாபூதமான ஸ்வாபாவிக தர்மமான மாயை பிரம்மத்தை மித்யையாக்காமல் விடாது.

4. மேலும் மாயை பிரம்மத்தின் ஸ்வாபாவிகமான தர்மமானல் மாயாத்மகமான இந்த எல்லா பிரபஞ்சமும் பிரம்மத்தின் தர்மமேயாகும். ப்ரம்மமே கல், பிரம்மமே மண், உஷ்ணத்தன்மை அக்னியிலிருப்பதுபோல் ப்ரம்மமே ஸ்வாபாவிகமான மாயாபரிணாமமுள்ள உன்முதுகுள்ளவன்.

(தொடரும்.)



# ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய மணிமஞ்ஜரி.

(ஆருவது ஸர்க்கம்.)

முன் தொடர்ச்சி.

இதனல் சங்கரரின் தாய் விசிஷ்டை என்றும் தந்தை விச்வஜித் என்றும் விசிஷ்டை தனது பர்த்தாவை மிகுந்த பக்தியுடன் உபாஸித்துவந்தும் விச்வஜித் அவளை விட்டுவிட்டு காட்டுக்கு போய்விட்டாரென்றும் விசிஷ்டை சிதம்பரேசுவரனை லேவித்துவர பகவான் பரமசிவன் அவளுடைய வாயின் வழியாய் பிரவேசித்து அவளுக்குக் கர்பம் தந்தாரென்றும் இது ஜனங்களுக்கு அதிசயமாக இருந்ததென்றும் பத்தாவது மாஸத்தில் பரமசிவன் சங்கராசாரியாரென்று அவதரித்தாரென்றும் தெரிய வருகிறது. இதனல் சங்கரரின் ஜனனகாலத்தில் அவளுடைய தாயிக்கு தந்தையின் ஸம்போகமில்லை என்றும் பர்த்தாவின் சம்போகமில்லாமல் விசிஷ்டை கர்பம் தரித்தது ஜனங்களுக்கு அதிசயமாக இருந்ததென்றும் ஆனந்தகிரி ஒப்புக்கொண்டதாய் ஏற்படுகிறது. அம்மதத்தினராகிய புருஷோத்தமபாரதி என்றவர் இயற்றிய சங்கரவிஜயத்திலோ சங்கராசாரியாரின் ஜனனம் இன்னமும் வெகு ரஸமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் சொல்வதாவது:— துஷ்டர்களை சம்ஹரிக்க பரமசிவன் காலடி க்ஷேத்திரத்திற்கு ஓர் ஸன்யாஸி உருவத்துடன் வந்தார். அங்கு ஓர் விதவை ப்ராதஸ்நானத்திற்காக பூர்ணா நதிக்கரைக்கு வந்திருந்தாள். அவள் இந்த ஸன்யாஸியைப்பார்த்து நீர் எந்த ஊரென்று கேட்க ஸன்யாஸி நான் கைலாஸத்திலிருந்து வந்திருக்கிறேன். நான்தான் பரமசிவன். நான் இங்கு ஆவிர்பவிக்கப் போகிறேன். எனக்கு நீ பணிவிடை செய். இதோ இந்த பூசணி விரையை உன் வீட்டில் ஓர் பாத்தியில் ஊன்றிவைத்து தினம் ஜலத்தை ஊற்றிவா அந்த கொடியிலிருந்த அதன் இலை காய் ஒன்றையும் பரிக்காதே என்று சொல்லி அந்த விரையை

கொடுத்து மறைந்தார். அந்த விதையை அவ்வாறே செய்துவர பூசனிக்காய் காய்த்து அது பழுத்து பூமியில் விழுந்து உடைய அதிலிருந்து ஓர் குழந்தை வெளியாயிற்று. அந்த குழந்தையை அந்த அம்மாள் வாரி எடுக்கவும் குழந்தை அழத்துவக்கியது. அந்த குழந்தையின் அழுகைக்குரலைக் கேட்டவுடன் ஜனங்களெல்லோரும் அவளுடைய வீட்டுக்குள் ஓடிவந்து குழந்தை இல்லாத இவ்விதவைக்கு இச்சிறு குழந்தையேது? எப்படி உண்டாயிற்று என்று ஆவலுடன் கேட்க அவள் பயத்தால் நடுநடுங்கி ஸன்யாசி வந்ததும் பூசனி விரை தந்ததும் பூசனியிலிருந்து குழந்தை வெளியானதுமான கதையைச் சொன்னாள். ஜனங்கள் இந்த கதையை நம்பாமல் அந்த விதவையை கோபித்து திட்டி எல்லோரும் வீடுபோய்ச் சேர்ந்தனர்.. பிறகு அந்த விதவை குழந்தையை சந்தோஷமாய் வளர்த்தாள். என்றிவ்வாறு அந்த சங்கரவிஜயத்தில் வரையப்பட்டிருப்பதாவது:—

வேதாக்னிஹோத்ரஹீனாம்ஸ் ச த்ருஷ்ட்வா சம்புர் மஹீதலே/ விலோக்ய காலடி க்ஷேத்ரம் சுப்ரஸ்த்தம் மனோஹரம்] ஆவிர்பூயாத்ர துஷ்டானாம் கர்தவ்யோ நிக்ரஹோ மயா / இத்யாலோச்ய ததால்காத்வா காலடிக்ஷேத்ரமாவிசத்|| இதானீம் சர்வயதினம் த்ருஷ்ட்வைகா கதபர்த்ருகா/ தேவபூஜாரதா நித்யம் சிவபக்தி ப்ராயணா] ப்ராதஸ் நானார்த்த மாயாதா பிக்ஷுரூபதரம் சிவம்|| ப்ரணிபத்யாத பப்ரச்ச கஸ்மாததேசாத் த்வமாகத:]] ஈச்வர உவாச] ஆகதோஹம் மகாபாகே கைலாசாதிபதிச்சிவ:] ஆவிர்பவாது சாத்ரைவ ஸேவாம் கர்த்துமிஹார்ஹஸி] இத்யுக்த்வா கலு கூஷ்மாண்ட பீஜமேகம் ப்ரதாய ச] தத்ரக்ஷணீயம் யத்னேன ஸ்தம்பமூலே ப்ரதிக்ஷிப] ஜலமாஸிஞ்ச தன்மூலே வல்லீம் புஷ்பம் பலம் ததா] நசேதய பலம் பக்வம் ஸ்வயமேவ பதிஷ்யதி] இத்யுக்த்வாந்தர்ததே கம்பு: கைலாஸமகமத் க்ஷணாத்]] .... .... .... .... பலமேகம் ததா பக்வம் ஸ்தம்பாக்ராந்நிபபாதஹ]' பலேச பதிதே தத்ரமஹாபுருஷமீச்வரம்] த்ருஷ்ட்வா பாலசமாதாய ஸம்ரக்ஷப்ரயத்னத:]] ததானீம் பாலருதிதம் ச்ருத்வா தத்ராகிலாஜனா:] ஆகத்யேதத் கிருஹம் சீக்கிரம் ஸபாதாம் தாததாப்ருவன்] அபுத்ராயாஸ்தவ கதம் பால ஏஷ ஸமாகத:] இத்தம் ஜனவச:



ச்ருத்வா ஸாப்ரவீத் பயவிஹ்வலா]] .... .... .... .... .... தத்ராஜாதாத் பலாத் ஸத்ய: பதிதோஹ்யேஷ ச பாலக:] லப்தஸ்சான்யன்ன ஜானேஹம் இதி ச்ருத்வா ச தே ஜனா:] நாரீம் நிர்பர்த்ஸ்ய கோபேன ஸர்வேபி ஸ்வகிருஹம் யயு:] ததஸ்ஸாபாலகம் ஸம்யக் அதிஹர்ஷாதபாலயத்]] என்றிவ்வாறு. தற்போது விசேஷமாய் ப்ரசாரத்திலிருந்துவரும் மாதவீய சங்கரவிஜயத்திலோ சங்கரர் ஜனிக்கும்போது தந்தையான சிவகுரு இருந்ததாகவும் அவருடைய உபநயனத்திற்கு முன்பு இறந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. சித்விலாஸமுனி எழுதிய சங்கரவிஜயத்தில் அவரவர்களின் நாமதேயங்கள் மாற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு தங்கள் ஆசாரியாளின் சரித்திரத்தைச்சொல்ல முன்வந்த அம்மதத்தினர்களிலேயே சங்கராசாரியாரின் ஜனனப்ரகார விஷயத்தில் அபிப்பிராயபேதங்கள் இருக்கின்றன. ஒருவர் ஸதிபதிகளின் ஸம்பந்தத்தால் அவர் பிறந்தாரென்கிறார். மற்றொருவர் அவருடைய தாயிடம் ஈசுவரன் ப்ரவேசித்து அதனால் கர்பமுண்டாகி கர்பத்தினின்றும் பிறந்தவரென்கிறார். மற்றொருவர் அவளுடைய தாய் கர்பம் தரிக்காமலே பூசனிக்காயினின்றும் வெளியானவரென்கிறார். தாய் தந்தையர்களின் பெயர் அவர் பிறந்த இடம் எல்லாம் தகரார். மாதவாசாரியார் சொன்னது தான் சரியென்றும் இதரர்கள் சொன்னது தவறென்றும் சொல்ல அம்மதத்தினர்களிலேயே அந்தந்த சங்கரவிஜயத்தை பிரமாணமாகக்கொண்டவர்கள் ஒப்புக்கொள்ளமுடியாமலிருக்கையில் இதரமதத்தினர்களுக்கு விசுவாசம் ஏற்படுவதெப்படி? சங்கராசாரியார் ஸம்பந்தமான சிலாகனை அதிகமாயிருக்கலாமென்றும் குறைகள் உண்மையாயிருக்கலாமென்றுதான் நினைக்கக்கூடும். ஆதலால் ஆனந்தகிரி சொன்னபடி சங்கரரின் தாயிக்கு அவளுடைய பதிவியோகமில்லாமல் கர்பம் ஏற்பட்டதென்ற அம்சமும் புருஷோத்தமபாரதி சொன்னபடி சங்கரரை போஷித்த விதவையிடம் அவளுடைய பந்துக்களுக்கு தோஷபுத்தி ஏற்பட்டதென்ற அம்சமும் ஸ்ரீநாராயனபண்டிதாசாரியார் சொன்னதற்கு பொருத்தமாயிருக்கிறதென்று நன்கு விளங்குகிறது. ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார் சங்கராசாரியாரின் தாய் விபசாரி என்

கிருர். அதைப்பற்றி பரிசீலனைசெய்தால் சங்கரவிஜயங்களிலும் சிறிது ஆதரவு இருப்பதாய் தெரியவருகிறது. சங்கரரின் தாயார் விஷயத்தில் அக்காலத்திய ஜனங்களுக்கும் அவளுடைய பந்துக்களுக்கும் யோக்யமான அபிப்பிராயமில்லையென்பது அவள் இறந்தபொழுது அவளுடைய ஸம்ஸ்காரத்திற்கு ப்ராம்மணர்கள் ஒருவரும் வராமல் அவளை பஹிஷ்கரித்ததிலிருந்து நிச்சயிக்க வேண்டியிருக்கிறது. அதனால் சங்கரர் தன் தாயின் ப்ரேதத்தை தானே தூக்கிப்போய் தன் வீட்டின் கொல்லையிலேயே கொளுத்தினரென்றும் அந்த ஆசாரம் அந்த தேசத்திலேயே அதன்பிறகு நிலைநிற்கும்படி சாபமிட்டாரென்றும் அதன்படியே இப்போதும் நடந்துவருகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. புருஷோத்தமபாரதி அறிவிப்பதாவது:— இதி உக்த்வா புத்ரமாலிங்கய தேஹம் த்யக்த்வா திவம்கதா| ததோ மாது: க்ரியார்த்தம் து தத்ரத்யா ப்ராம்மணோத்தமா:| ஆஹூதா அபிநாயாதா சாபம் தத்வா ததோ குரு:| ததா தேவான் ஸமாஹூய தாஹயாமாஸ தைஸ்ஸஹ| ம்ருத்தேஹம் தத்ஸர்வாம்ம க்ரியாம் நிர்வர்த்ய தேகதா:| ஆசார்ய மதுலம் த்ருஷ்ட்வ தத்ரத்யா ப்ராம்மணோத்தமா:| ததா ப்ரபிருதி சாபேன நிகடே ப்ரதஹந்தி ச|| என்று மேலும் மாதவாசாரியாரின் சங்கரவிஜயத்திலேயும் அவளுடைய ஸம்ஸ்காரத்திற்கு சங்கராசாரியாரின் பந்துக்களை அழைத்தும் அவர்கள் வராமல் நின்றதோடு அக்னியையும் கொடுக்க மறுதளித்தனரென்றும் சங்கரர் தன்வீட்டு கொல்லையிலேயே அவளைக்கொளுத்தினரென்றும் அன்று முதல் அந்த தேசத்தார்களின் வீட்டு கொல்லையே ஸ்மசானமாக சங்கரர் சபிக்க அப்படியே இருந்து வருகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு காணப்படுவதாவது:— அனலம் பஹூதார்த்திதாபி தஸ்மை பத நாதுக்த ச பந்துதா ததியா| அதகோப பரீவிருதாந்தரோஸௌ அகிலாம்ஸ்தான ச பச்ச ஸம்யமீந்த்ர:|| ஸம்சிந்த்யகாஷ்டானி ஸுசுஷ்க வந்தி கிருகோபகண்டே திருததோயபாத்ர:| ஸ தக்ஷிணே தோஷ்ணி மமந்த வன்ஹிம் ததாஹதாங்கேன ச ஸம்யதாத்மா|| நயா சிதா வன்ஹிமதுர்ய தஸ்மை சசாபதான் ஸ்வீயஜனான் ஸரோஷ:||

(தொடரும்.)



# துளசியின் மஹிமை.

ஸ்ரீமான் கா.பே. ஸ்ரீனிவாஸாசாரியார் B.A., எழுதுவதாவது.

பிரதிதினம் சாஸ்திர விகிதமான காரியங்களைச் செய்வது புருஷார்த்தங்களில் சிரேஷ்டமான மோக்ஷத்திற்கு காரணமாகிறது. அதிலும் நாம் செய்யும் அந்தந்த காரியத்தின் மாகாத்மியத்தைத் தெறிந்துகொள்வது மிகவும் சிலாக்யமாகும். ஆகவே நாம் செய்யும் பிரதிதினம் பூஜாகாலத்தில் உபயோகிக்கும் துளஸி பத்திரத்தின் மகிமையை அறிவது எல்லா புருஷர்களுக்கும் பிருந்தாவன பூஜை செய்யும் எல்லா ஸ்திரிகளுக்கும் மிகவும் அவசியம். துளசியின் மகிமை அநேக புராணங்களில் சொல்லப்பட்டிருப்பினும விசேஷமாய் பாத்மபுராணத்திலும் ப்ரம்மவைவர்த்த புராணத்திலும் சொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தகுந்ததாயிருக்கிறது.

துளசி என்னும் பெயர் காரணத்தை முன்னிட்ட பெயர். உலகில் ஓர் வஸ்துவுக்கு ஸமமாக மற்றொருவஸ்து இருப்பதுண்டு. உலகிலுள்ள உல்லா வஸ்துக்களுக்கும் மேலானது துளசிபத்திரம் துளசி என்றால் அதற்கு நிகரான வேறொருவஸ்து இல்லை என்று பொருள்படுகிறது. துலா ஸ்யதி நாசயதி (அதன் சமமாயிருக்கும் தன்மையைப் போக்கடிக்கிறது.) இத்யத: துளசி என்று வ்யுத்பத்தி ஆகிறது. இதற்கு விஷ்ணுவல்லபா. ஹரிப்ரியா, பவித்ரா, அமிருதா, ஸுரவல்லி, பஹுமஞ்ஜரி, மாதவி என்று அநேக பெயர்கள் இருக்கின்றன.

விசேஷமாய் கார்த்திகமாஸத்தில் இதற்கு மகிமை அதிகமென்று சொல்லலாம். அப்பொழுது இதைப் பயிர் செய்தாலும். ஸ்பரிசித்தாலும், தரிசித்தாலுமே ஒரு யுகம்வரை செய்த காயிக வாசிக மானஸிகமான பாபங்கள் தொலைவதாய் சொல்லப்பட்டிருக்கிறது. இதர எல்லா பத்ரபுஷ்பங்களைக்கொண்டு பது

வானை அர்ச்சித்த பலன் துளசியின் பாதிதளத்தால் அர்சனை செய்தாலுமே கிடைக்கும். துளசி விருக்ஷத்தின் நிழலில் சிராத்தாதி க்ரியைகளைச் செய்தால் அவனுடைய பித்ருக்கள் பரமதிருப்தியடைகிறார்கள். துளசியின் மிருத்திகை தரித்த நெற்றியுள்ளவனுடைய குலத்தாரிடமே கலியின் வேகம் செல்வதில்லை என்றால் அவனுக்கு கலிபாதை ஏது? துளசிவிருக்ஷத்தின் அடியில் எல்லா தீர்த்தங்களும் மத்தியில் எல்லா தேவதைகளும் உச்சியில் எல்லா வேதங்களுமிருக்கின்றன. ஸதா துளசி பத்திரத்தின் மத்தியில் ஸ்ரீஹரியும் நுனியில் ப்ரம்மாவும் அடியில் ருத்திரனும் வசிக்கின்றனர். கோடைகாலத்தில் குளிர்ந்த ஜலத்தை துளசியின் அடியில் ஊற்றுகிறவன் மோக்ஷலோகத்திற்கு ஸமானமான லோகத்தை அடைவான். கோடைகாலத்தில் துளசியின்மீது குடைபிடிக்கிறவன் எல்லா பாபங்களினின்றும் முக்தனாகிறான். வைசாகமாஸத்தில் துளசிக்கு ஜலம் வார்த்தால் அசுவமேதயாக பலன் கிடைக்கும். துளசிவிருக்ஷத்தின் அடியில் ஒருவன் 'பால் வார்த்தால் அவனுடைய கிருஹத்தில் ஸ்திரமாய் மாலக்ஷ்மி வசிப்பாள். தர்மகாரியங்களையும் கர்மானுஷ்டானங்களையும் ஸ்ரீ நாராயணனுக்கு ப்ரியமான துளசியை விட்டுச் செய்தால் அந்த கர்மங்களெல்லாம் நிஷ்பலமாய்ப்போகின்றன. மேலும் அவைகளால் பரமாத்மாவும் திருப்தியடைவதில்லை.

பௌர்ணமி, அமாவாசை, துவாதசி, பானுவாரம், சூரிய சங்கிரமணம் எண்ணெய் தேய்த்துக்கொண்டிருக்கிற சமயம், மத்யான்ஹம், ஸந்த்யாகாலம், இராத்திரி, ஆசௌசகாலம் இந்த சமயங்களில் துளசியை எடுத்தால் அவன் ஸ்ரீஹரியின் சிரஸ்ஸை சேதித்தவனாவான். அன்று தேவபூஜைக்கு அதிக அவசியமான துளசியை எடுக்க திதிவாராதி நிர்பந்தங்களில்லை. துளசி பத்திரத்தை வைத்துக்கொண்டு பொய் பிரமாணம் செய்கிறவன் ஓர் கல்பம்வரை நரகத்தில் வசிக்கிறானென்று ப்ரம்மவைவர்த்த புராணம் அறிவிக்கிறது.

துளசிதளத்தை எடுக்கும்பொழுது இவ்வாறு சொல்லவேண்டும். "மாதஸ்துளசி கோவிந்த ஹிருதயாநந்த காரிணி| நாராயணஸ்ய பூஜார்த்தம் சிநோமித்வாம் நமோஸ்துதே|| குஸுமை: பாரிஜாதாத்யை: ஸௌகந்தைரபி கேசவ:| த்வயாவினா நைவதிருப்திம் சிநோமி த்வாமத: சுபே|| த்வயாவினா மகாபாகே ஸமஸ்தம் கர்ம நிஷ்பலம்| அதஸ்துளசி தேவித்வாம் சிநோமிவரதாபவ|| சயனோத்பவ துக்கம் யத் தேவிதே ஹிருதிவர்ததே| தத்க்ஷமஸ்வ ஜகன்மாதஸ் துளசித்வாம் நமாம்யஹம்||" கோவிந்தனின் மனதிற்கு ஆனந்தத்தைதருபவளான தாயாரான துளசிதேவியே! ஸ்ரீநாராயணனின் பூஜைக்காக உன்னை எடுக்கிறேன். அநேக வாஸனையுள்ள பாரிஜாதம் முதலான புஷ்பங்களிருந்தபோதிலும் நீ இல்லாமல் திருப்தி ஏற்படுவதில்லையாதலால் மங்களகரமான துளசியே உன்னை எடுக்கிறேன். பாக்யசாலியே! உன்னையல்லாது எல்லா காரியங்களும் நிஷ்பலமானவைகளாதலால் உன்னை பரிக்கிறேன். வரனையளிப்பாய் தளத்தைப்பறிப்பதால் உன்னுடைய ஹிருதயத்தில் என்ன வேதனையேற்படுகிறதோ அதைப் பொறுத்துக்கொள். உன்னை நமஸ்கரிக்கிறேன். என்று சொல்லி நமஷ்காரம் செய்து மூன்று தடவை கைகொட்டிவிட்டு துளசி செடியின் சிறு கிளைகள் அசையாதபடி துளசிதளங்களைப்பறிக்க வேண்டும். விக்னேசுவரபூஜை காலங்களில் துளசியை உபயோகிக்கக்கூடாது. விக்னேசுவர வாக்யமே அப்படியிருக்கிறது. "புண்யானாம் ஸாரபூதாத்வம் பவிஷ்யஸிபகினாமே| கலாம்சேன மகாபாகே ஸ்வயம் நாராயணப்ரியா| ப்ரியாத்வம் ஸர்வதேவானாம் கிருஷ்ணஸ்ய சவிசேஷத:|| பூஜா விமுக்திதாநிருணாம் மமத்யாஜ்யா ச ஸர்வதா||" மனோஹரமான துளசியே! புண்யங்களில் உத்தமமானவள். ஓர் அம்சத்தால் நாராயணனுக்கு ப்ரியமானவள். எல்லா தேவர்களுக்கும் ப்ரியமானவள். விசேஷமாய் கிருஷ்ணனுடைய பூஜையில் முக்தியைத்தருபவள். என் பூஜையில் எப்போதும் நீ விலக்கக்கூடியவள்" என்று விக்னேசுவரர் துளசியைப் பார்த்துச் சொல்லியிருப்பதால் துளசி பத்திரத்தால் தனியாய் பூஜிக்கலாகாது. பகவானுடைய நிர்மால்ய துளசி விக்னேசுவரனுக்கு உபயோகப்படுத்தலாம்.

# மதிப்புரை.

## ஸ்ரீபாகவத அனுக்ரமணிகை.

ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள இந்நூல் இந்நகர் ஸ்ரீமத்வவிலாஸ புஸ்தகசாலை அதிபதி ஸ்ரீமான் பண்டிட் T. R. கிருஷ்ணாசாரியாரவர்களால் வெகு சிலாக்யமாய் தயார் செய்யப்பட்டு அவருடைய இதா பிரசுரங்களைப்போல் உயர்ந்த காகிதத்தில் நல்ல தேவநாகர எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது ஸ்ரீமகாபாரதத்திற்கு தயாரித்த அனுக்ரமணிகையின் ரீதிப்படி ஸ்ரீமத் பாகவதத்திற்கு உபயோகப்படும்படியாய் இந்நூல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதில் ஒவ்வொரு ஸ்கந்தத்தின் அத்யாயவாரியாய் கதைச்சுருக்கம் எளிய ஸம்ஸ்கிருத நடையில் எழுதப்பட்டிருக்கிறதுமன்றி ஸ்ரீமத் பாகவதத்தில் காணப்படும் பிரஸித்தமானவைகளும் முக்யமானவைகளுமான நூற்றுக்கணக்கான பெயர்களை அகாராதிக்ரமேண எடுத்து அவைஸம்பந்தமான விஷயங்கள் பாகவதத்தில் எந்த அத்யாயத்தில் எந்த சுலோகத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவென்பதை தெளிவாய் காட்டப்பட்டிருக்கிறது. ஆனல் துவைதிகளின் பாடமான ஸ்ரீவிஜயத்வஜாசாரியாரின் பாடத்தின் அத்யாயங்கள் சுலோகங்கள் இவைகளின் கணக்கு இந்நூலில் கண்ட கணக்குக்கு ஒத்துவராதென்று இதன் ஆசிரியரின் முன்னுரையிலிருந்தே நன்கு விளங்குகிறது. அத்வைதத்தைத் தழுவி வியாக்யானம் செய்திருக்கும் ஸ்ரீதரரின் பாடமும் சுத்த அத்வைதத்தை தழுவி எழுதியிருக்கும் வல்லபாசாரியாரின் பாடமும் விசிஷ்டாத்வைதத்தைத் தழுவி எழுதியிருக்கும் வீரராகவரின் பாடமும் ஒத்துவருகிறதென்றும் த்வைதத்தை தழுவிவ்யாக்யானம் செய்திருக்கும் விஜயத்வஜாசாரியார் இதரர்களின் பாடங்களை நிராகரித்திருக்கிறாரென்றும், அவர்கள் இதற்கு பதிலாக விஜயத்வஜாசாரியாரின் பாடத்தை நிராகரித்திருக்கின்றனரென்றும் தான் உபயோகமுள்ள எதையும் நிராகரிக்கப்போவதில்லை என்றும் எல்லோரும் நம்பத்தகுந்தவர்களே என்றும் ஸ்ரீமான் ஆசாரியார் அறிவித்துள்ளார். இதுவரை யாராலும் இம்மாதிரி நூல் வெளியானதில்லை. இதன் விலை நடுத்தர அந்தஸ்துள்ளவர்களுக்கு ரூ. 4—0—0. என்றும் மேலான பதவியுள்ளவர்களுக்கு ரூ. 5—0—0 என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட பதிப்பாசிரியரிடம் இந்நூல் கிடைக்கும்.



## ஸ்ரீவியாஸராஜஸ்வாமிகளின் படம்.

சென்னை ஸ்ரீவியாஸா அஸோஸியேஷன் ஆதரவில் ஸ்ரீசந்திரிகாசாரியாளென்னும் ஸ்ரீவியாஸராஜஸ்வாமிகளின் ஓர் சுந்தரமான போட்டோபடம் தயார் செய்யப்பட்டிருக்கிறது. சமீபத்தில் விஜயநகர ராஜாவும் எதிரில் தானம் பெறும் ஓர் ஆசாரியாரும் நின்றிருப்பது மனோஹரமாய் இருக்கிறது. அடியில் ஸ்ரீவியாஸராஜரின் பரம்பராகதமான த்யான சுலோகமாகிய அர்த்திகல்பித கல்போயம் ப்ரத்யர்த்திகஜகேஸரி | வியாஸதீர்த்த குருர்பூயாத் அஸ்மதிஷ்டார்த்த ஸித்தயே என்ற சுலோகமும் வரையப்பட்டிருக்கிறது. இந்த சுலோகத்தைப்பற்றி நாம் ஒன்று சொல்லவேண்டியிருக்கிறது. இந்த சுலோகம் ஸ்ரீசந்திரிகாசாரியாளை பற்றியதல்லவென்றும் ஸ்ரீவியாஸராஜரென்று ஸ்ரீசந்திரிகாசாரியாளுக்கு பெயர் இருந்ததாக தெரியவருகிறதேயன்றி வியாஸதீர்த்தரென்று அவருக்கு பெயர் இருக்கவில்லையென்றும் ஒரு சிலரால் கக்ஷி சொல்லப்படுகிறது. பரம்பராகதமாய் எண்ணிறைந்த மாத்வபண்டிதர்களின் வீட்டில் ஸ்ரீசந்திரிகாசாரியாளுக்கு தீர்த்தம் வழங்கப்படும் காலத்தில் இந்த சுலோகம் சொல்லப்பட்டுவருவதாய் நிச்சயமாய் தெரியவருகிறபடியால் இந்த சுலோகம் ஸ்ரீசந்திரிகாசாரியாள் விஷயமாயிருக்காதென்று ஆக்ஷேபிப்பதற்கு இந்த சுலோகத்தில் சொல்லப்படும் வைதுஷ்யம் பரம ஔதார்யம் முதலான குணகணங்கள் ஸ்ரீவியாஸராஜருக்குப் போய் சேருகிறதென்ற மாச்சரியத்தால் சொல்லப்படுகிறதோவென்று எண்ணவேண்டியிருக்கிறது. ஸ்ரீசந்திரிகாசாரியாளுக்கு ஸ்ரீவியாஸதீர்த்தரென்று பெயர் இருப்பதாய்ச்சொல்ல பண்டிட் ஸோமநாத கவி இயற்றிய ஸ்ரீவியாஸயோகிசரிதமே முக்ய அத்தாக்ஷியாகும். வியாஸவியஜமென்று அவருடைய சரித்திரத்துக்கு பெயரும் வியாஸஸமுத்ரமென்று அவருடைய ஸம்பந்தம்பெற்ற குளத்துக்கு பெயரும். இருப்பதை யாவராலும் மறுக்கமுடியாதென்பது குறிப்பிடத்தகுந்ததே. அடியிற்கண்ட விலாஸதாரரிடம் இந்த படம் கிரயத்திற்கு கிடைக்கும்.

விலாஸம்:— K. V. ராகவராவ்,
43, ஈசுவரதாஸலாலா தெரு, திருவல்லிக்கேணி, மதறாஸ்.

## நாம முத்ராதாரண படம்.

இது மாத்வர்களுக்கு மிகவும் உபயோகமானது. மாத்வர்கள் எந்த எந்த நாமங்களிலும் எந்த எந்த பாரிசுவத்திலும் எந்த எந்த முத்திரை

களை தினம் தரித்துக்கொள்ளவேண்டுமென்பதை யாவரும் எளிதில் உணரும்படி சித்திரப்படமாகவே எழுதி காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீவிஷ்ணுரஹஸ்ய கிரந்தத்தில் இதற்கு பிரமாணமாகவுள்ள சுலோகங்களையும் எடுத்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. அடியிற்கண்ட விலாஸதாரரிடம் விலை அணா இரண்டுக்கு இதை கிரயத்திற்கு பெறலாம்.

விலாஸம் :— பி. கே. மத்வராயாசாரியார்,
13, சிங்காராசாரியார் தெரு, திருவல்லிக்கேணி, மதறாஸ்.

# செய்தித்திரட்டு.

---

## சென்னை மாத்வா அஸோஸியேஷன்.

### வருஷாந்தரக் கொண்டாட்டம்.

---

இதன் ஏழாவது அப்தபூர்த்தியும் ஸ்ரீமுக ஸம்வத்ஸரம் யுகாதி பண்டிகைக்கொண்டாட்டமும் சென்ற 27—3—33உயன்று திருவல்லிக்கேணி S. M. S. O. கிதி கட்டிடத்தின் ஹாலில் மகா விமரிசையாய்க் கொண்டாடப்பட்டதென்றும் அச்சமயம் ஸ்ரீமான்களான ஆரணி சுப்பராவ், ராவ்ஸாகேப் டி. கே. ஹனுமந்தராவ், கே வியாஸராவ் T. வாசுதேவராவ், டாக்டர் ஜிம்மி வெங்கடரமணய்யர், பண்டிட் கௌலகி யதுநாதாசாரியார் முதலான பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனரென்றும் காரியதரிசிகளால் எல்லோரும் வரவேற்கப்பட்டபின் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டதென்றும் பிறகு ஸ்ரீமவே உய்யூர் ஸ்ரீனிவாஸாசாரியரால் புதிய வருஷ பஞ்சாங்கம் வாசிக்கப்பட்டு ஸ்ரீமான் நேமம் நடராஜ பாகவதர் குமாரரான ராமச்சந்திர சாஸ்திரிகளால் வீணாகானம் செய்யப்பட்டதென்றும் பிறகு ஸ்ரீமான் ராவ்ஸாகேப் டி. கே. ஹனுமந்தராவ் அவர்களால் சபையோருக்கு வந்தனோபசாரமளிக்கப்பட்டதுமன்றி கர்னாடக சங்கீதத்தின் அதிலும் விசேஷமாய் வீணாகானத்தின் மேன்மையையும் அதை அபிவிருத்திக்குக் கொண்டுவருவதைப்பற்றியும் சொல்லப்பட்டதென்றும் சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டு சபை இனிது கலைந்ததென்றும் ஷை அஸோஸியேஷன் கௌரவகாரியதரிசியான ஸ்ரீமான் Y. ரகுநாதராவ் அறிவிக்கிறார்.

---



## விளம்பரம்.

---

திருநெல்வேலி டவுன் பெருமாள் ஸன்னதிதெருவில் ஸ்ரீமான் புதூர் ஜமீன்தார் கிருஷ்ணராவ் அவர்களால் மாத்வர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட பாடசாலையில் இலவசமாய் மூன்று வேளை போஜனமும் வருஷத்திற்கொருமுறை இரண்டு வஸ்திரங்களும் தங்குவதற்கு அனுகூலமான வஸதியும் கொடுத்து வித்யாப்யாஸம் செய்யப்பட்டுவருகிறது. தற்போது அப்பாடசாலையில் ஒரே ஒரு மாத்வ வித்யார்த்திதான் படித்துக்கொண்டுவருவது வருந்தத்தக்கதாயிருக்கிறது. ஆகையால் மாத்வ வித்யார்த்திகள் காலதாமதமின்றி அடியில் கண்ட விலாசதாரருக்கு மனு எழுதிக்கொண்டு அப்பாடசாலையில் ஏராளமாய் சேர்ந்து வித்யாப்யாஸம் செய்து மூல புருஷருடைய மேலான நோக்கத்தை பூர்த்தி செய்ய கேட்டுக்கொள்ளுகிறேன். போதுமான வித்யார்த்திகள் சேர்ந்தவுடன் எந்த பாடத்திற்கும் தகுந்த ஏற்பாடு செய்யப்படும். வித்யார்த்திகளுக்கு வயது நியமமில்லை.

அடியிற்கண்ட விலாஸதாரர்களுக்கு மனு செய்துகொள்ளப்பட வேண்டும்;— T. S. ஸ்ரீனிவாஸ ராவ், B.A., B.L., A. K. கிருஷ்ணஸ்வாமி ராவ், புதூர்ஹௌஸ், திருநெல்வேலி டவுன்.

16—3—33 முகாம் கும்பகோணம், கௌலகி யதுநாதாசாரியார்.

[குறிப்பு:— மாத்வமித்திரர்களுக்கு தகுந்த சௌகரியங்களை ஏற்படுத்தியும் வித்யார்த்திகள் வித்யாப்யாஸம் செய்ய முன்வாராமலிருக்கிறார்களென்பதை அறிய விசனிக்கிறோம். தற்பொழுது பல பெரிய நகர்களிலும்கூட புண்யாகவாசனம் சிரார்த்தம் முதலிய சில்லரை யாக்ஞிகங்களைகூட ஒழுங்காய்ச் செய்துவைக்கிறவர்கள் துர்லபமாயிருக்கின்றனர். ஆகவே இந்த பாடசாலையில் பூர்வாபர யாக்ஞிகங்களை செய்விக்கிறவர்களை உபாத்யாயர்களாய் அமர்த்தி வித்யார்த்திகளை தயாரித்து அனுப்பினால் இச்சமயம் ஜனங்களுக்கு இது மிகவும் உபகாரமாயிருக்குமென்பது எமது துணிபு. வித்யார்த்திகளும் வெகு தூரதேசத்திலிருந்தாலும் எல்லா வகை சௌகரியங்களும் இங்கு செய்து கொடுக்கப்படுவதால் இந்த பாடசாலையில் ஏராளமாய் சேர்ந்து நன்மையடைவார்களாக. ப—ர்.]

---

ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீபூவராகஸ்வாமி 12—3—33 உயன்று ஸமுத்ரத்தில் தீர்த்தம் கொடுத்து மாலை 2 மணிக்கு கிள்ளையில் மண்டபத்தில்

எழுந்தருளினாரென்றும் அச்சமயம் அதிகமான மழை பெய்ததால் கிள்ளையிலுள்ள மான்யதாரரால் நடத்தப்படும் பிராம்மண ஸந்தர்ப்பணை மாலை 3 மணிக்கு நடந்ததென்றும் சுமார் 130௵ காலமாய் அன்று மத்யான்ஹத்தில் எலத்தூர் ஆசாரியாள் ஸந்ததியாரால் நடத்தப்படும் நீர்மோர் அவல்தினுசுகள் பஞ்சாமிர்தம் முதலியவைகளோடுகூடின பலகாரவினியோகத்திற்கு சீர்காழி ஸ்ரீமான் சுப்பராய முதலியாரால் அனுப்பப்படும் 80 குடம் தயிர் மழையின் ஆதிக்கத்தால் சரியான காலத்தில் வாரததால் அன்றிரவு நடத்தப்பட்டதென்றும், மழையால் வருந்திய ஜனங்களுக்கு இது விசேஷ சௌகரியத்தை அளித்ததென்றும் இவ்வருடம் நடத்திய ஷை ஸந்ததியாராகிய ஸ்ரீமான் வெங்கடராயாசாரியாருடையவும் அவருக்கு திரவியசகாயம் புரியும் தார்மிகர்களுடையவும் பெருமுயற்சிக் கொண்டாடத்தகுந்ததென்றும் ஸ்ரீபூவராகரின் கிருபாகடாக்ஷத்தால் இது நீடூழிகாலம் நடக்கவேண்டுமென்றும் ஸ்ரீமான் பூவராகாசாரியார் ஸ்ரீமுஷ்ணத்திலிருந்து அறிவிக்கிறார்.

ஸ்ரீவியாஸராஜமடத்து ஸ்வாமிகள் இங்கே 7 தினமிருந்து நேற்றுதான் ஈரோட்டுக்குப்போனாரென்றும் இவ்வூர் சத்திரத்து எஜமான் ஸ்ரீமான்லக்ஷ்மீநரசய்யர் வெகு விமரிசையாய் பிக்ஷை முதலியவைகளை நடத்தினாரென்றும் இவ்வூரில் ஸ்ரீஹனுமத்ஜயந்தி ஸ்ரீமத்வநவமி ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் ஆராதனை முதலியவைகள் விமரிசையாய் நடத்தப்படுகிறதென்றும் ஸ்ரீராகவேந்திரரின் கோயிலைப்பார்த்துவிட்டு ஸ்ரீவியாஸராஜமடத்து ஸ்வாமிகள் மிகவும் சந்தோஷப்பட்டாரென்றும் இந்த ஊர் பிராம்மணர்களனைவரும் டெல்லி சபையுடன் சேர்ந்தவர்களென்றும் இவ்வாறே எல்லா ஊராரும் சேர்ந்தால் சண்டாள ஸம்பர்க்கத்தண்டாவே ஏற்படாதென்றும் ஊஞ்சலூரிலிருந்து 17—3—33உ யன்று ஸ்ரீமான் M. ஹனுமந்தராவ் அறிவிக்கிறார்

---

## ஜயதீர்த்தாதிகள் தேவாம்சமே.

முன் தொடர்ச்சி.

---

(2)

ஸ்ரீமுஷ்ணம் வியாகரணம் சுப்பராயாசாரியார் அவர்களின் குமாரரும் திருப்பதி மகந்து பாடசாலை வியாகரணப்ரதான பண்டிதருமான ஸ்ரீமலே, சேதுமாதவாசாரியார் எழுதுவதாவது:—



நிர்ணய கிரந்தத்தில் 32-வது அத்யாயத்தில் ஏதோ விஷயமிருப்பதாய் சிலர் எழுதியிருப்பதாய் தாங்கள் எழுதியிருக்கிறீர்கள். அதில் ஒன்றையும் காணும்.வெளியிட்டவர் யாரென்பது தெரிந்தால் நலம். மேலும் இவ்விதமான விஷயத்தை விசாரம் செய்வது சரியன்று என்பது பெரியோர்களின் கொள்கை.

(3)

ஐயா, தங்கள் 11—1—33உ மித்திரனில் செய்தித்திரட்டின் கீழ் எமது மாத்வ வகுப்பு மகனீயர்கள் லோகானுக்ரஹார்த்தமாய் பக்தர்களுக்கு அவர்களின் அபீஷ்டசித்தியை வர்ஷிப்பதைக்கண்டு மாத்வ சமூகத்தார் கர்வங்கொண்டிருக்கையில் பண்டிதர்களென்று தாங்கள் சொல்லும் பைத்தியக்காரர்கள் பித்துபிடித்து கலிப்ரவிஷ்டர்களாய் இன்னது சொல்வது இன்னது சொல்லலாகாதென்பது தெரியாமல் பிருந்தாவனஸ்தர்களான ஜயதீர்த்தாதிகள் பிசாசரூபமாயிருக்கிறார்களென்று சொல்ல முன்வந்தது எமது சமூகத்திற்கே வெட்கக்கேடான விஷயம், தெய்வத்தை நம்பும் ஆஸ்திகஜனங்களுக்கு சத்ருவாய் தற்காலம் சுயமரியாதைச்சங்கத்தார் ஏற்பட்டு தெய்வமில்லை, தர்மமில்லை, புண்யமில்லை, ஸ்வர்க்கமில்லை, நரகமில்லை என்று சொல்லிக்கொண்டிருப்பதுபோல் மாத்வர்களிலும் சுயமரியாதைச் சங்கத்தாரின் கமிஷன் ஏஜண்டுகள் ஏற்பட்டுவிட்டார்கள்போலும். ஐயோ! என்ன காலவிபரீதம். மாத்வர்களுக்கு மித்திரனாய் விளங்கி ஹரிகுரு பக்தியை வளர்த்திவந்த மாத்வமித்திரன் பத்திராதிபரும் இவர்களுக்கு ஆதரவு அளித்து இவர்களின் கக்ஷியை பிரசித்தப்படுத்தி ஹரிகுருத்ரோஹம் செய்ய கிளம்பிவிட்டார் போலும். ஜகதீசனான ஜனார்த்தனா! ஜயதீர்த்தாதி ஸத்குருமார்களே! மத்வமதத்தை காப்பாற்றலாகாதா! துர்வாதம் ஓங்காமல் செய்யுங்கள்.

மத்வதாஸன்.

[நிரூபர்களின் அபிப்பிராயம் பத்திரிகையின் சொந்த அபிப்பிராயமாகாதென்பது பத்திரிகைகளின் பிரசித்தமான கொள்கை. இத்தகைய நிரூபங்களை பிரசுரிப்பது ஹரிகுருத்ரோகமாகாதாவென்று சிலர் ஸம்சயப்படுகின்றனர். இதையே பூர்வபக்ஷமாகவைத்துக்கொண்டு வீண் ஆக்ரஹம் கொள்ளாமல் விசார

ரீதியில் தக்கபதிலளித்து இத்தகைய தூர்வாதம் ஓங்காமல் செய்வது ஹரிகுருஸேவைதானாகும். பூர்வபக்ஷவிஷயங்களைக் கொண்டதென்று ஓர் நூல் நிந்திக்கத்தகுந்ததாய்ஆகாது. சாஸ்திர விசாரம் செய்ய பூர்வபக்ஷம் மிகவும் அவசியம். ஆகவே ஆங்காங்குள்ள பண்டிதர்கள் சரியான பதிலை தகுந்த பிரமாணங்களுடன் காட்டும்படி ப்ரார்த்திக்கிறோம். ப—ர்.]

(4)

மகாபாரத தாத்பரிய நிர்ணயத்தில் 32-வது அத்யாயத்தில் எந்த சுலோகத்தில் இந்திராதிகளுக்கு கலியுகத்தில் அவதாரமில்லை என்று நிஷேதிக்கப்பட்டிருக்கிறதென்பதையும் ஸாம்சஜீவர்களுக்கு இன்ன இன்ன அம்சம்தான் என்று ஸ்ரீபகவத்பாதர்களால் எங்கு நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிறதென்பதையும் ஹரிதாஸவர்க்கத்தார்களிடமே இத்தனை அறுவெறுப்புகொள்ளும்படியான தோஷங்கள் என்னவென்பதையும் "இரு பண்டிதர்கள்" ஒளியாமல் மாத்வமித்திரன் வாயிலாய் உடனே அறிவிக்கக்கோருகிறேன்.

வாஸுதேவாசாரியார்.

(5)

ஜயதீர்த்தர் இந்திராம்சமல்லவென்று சொல்வது எக்காரணத்தாலும் மாத்வர்களால் நம்பமுடியாமலிருக்கிறது. இதர மதத்தார்களுக்கு எமது மத்வமத மகனீயர்களின் மகத்வத்தை இப்பண்டிதர்கள் போதிப்பதைவிட்டு எங்களிலேயே இதற்குமாறாக பிரசாரம் செய்வது கேவலம் ஹாஸ்யாஸ்பதம். மேலும் பண்டிதர்களே இதற்குமுன்வந்தது ரொம்பவும் ஆச்சரியம். ஜயதீர்த்த விஜயத்தை இயற்றிய வியாஸதீர்த்தர் எங்களுக்கும் குருவே ஆவார். அவருடைய வாக்யம் நிராகரிக்கப்போதுமான காரணம் சொல்லப்படவில்லை. த்வாதசஸ்தோத்திரத்திற்கு காரணபூதரான ஜயதீர்த்தர் முன் ஜன்மத்தில் எருதாக இருந்தாரென்றும் அவர்தான் மூலகிரந்தங்களை நன்றாய் தெரிந்தவரென்றும் அவைகளுக்கு அவர்தான் டீகை எழுதப்போகிறாரென்றும் ஆசாரியாளே சொன்னதாய் இதிகாஸமுண்டு. மத்வவிஜயத்தில் இது இல்லையே என்று நிராகரிக்கலாகாது. ஆசாரியாளின் சரித்திரம் மத்வவிஜயத்தில் பூராவாய் இல்லை. ஸம்க்ஷிப்ய வாக்யை: என்று தான் நா



ராயணபண்டிதாசாரியார் சொல்லியிருக்கிறார். ஜயதீர்த்தவிஜயம் குப்பைத்தொட்டியில் எறியப்படவேண்டுமென்றால் மத்வவிஜயம் முதலியவைகளையும் ஏனோ அப்படி செய்ய சொல்லலாகாது. ஆதிகாரிக தேவர்களுக்கும் கலியுகத்திலும்கூட பூலோகத்தில் ஸாதுரக்ஷணம் செய்ய அவதாரம் உண்டென்று நிர்ணயத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. உதாஹரணம் அணிமாண்டவ்யருடைய சாபத்தால் யமன் பூலோகத்தில் விதுரனாய் பிறந்தாலும் எமலோகத்தில் யாதொரு குறைவுமில்லை என்றும் அவ்விடத்தில் ஒரு ரூபமாயும் பூலோகத்தில் ஒரு ரூபமாயும் இருக்கிறார்; அதுபோலவே சௌனகாதிகள் ஆயிரம் வருடமாய் நடத்திவரும் ஸத்ரயாகத்தில் எமன் ப்ரசாமி என்கிற ரித்விக்காகவுமிருக்கிறார். என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கர்மக்ஷயாதேவ ஸுரேதராஸ்து புண்யக்ஷயம் ப்ராப்ய புவிப்ரஜாதா: என்பதை இப்பண்டிதர்கள் ஆதாரமாய்க்கொண்டிருக்கிறார்களென்றெண்ணுகிறேன். ஸுரேதரர்கள் பிறந்தார்களென்றால்தேவர்கள் பிறக்கவில்லை என்று எண்ணலாகாது: அதுமட்டிலல்ல.132 வது சுலோகத்தில் வாயுபகவானுடைய அவதாரமான மத்வாசாரியாருக்கு கைங்கரியம் செய்ய அர்ஜுனாத்யா: இந்திராதிகள் பிறந்தார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்குள்ள கிருதே என்ற பதத்திற்கு செய்வதற்கு என்று அர்த்தம் செய்யவேண்டுமேயல்லாது கிருதயுகமென்று அர்த்தம் செய்ய இடம் தருவதில்லை. ஏனென்றால் ப்ராஜாதா: என்று வினைச்சொல் இறந்த காலத்தைக் காட்டுமேயல்லாது எதிர்காலத்தைக் காட்டாது: அதுமட்டிலல்ல. தாம்ஸுதே கீர்த்திமகவா என்கிற சுருதியும் இந்திராதிகள் வாயு பகவானுக்கு பணிவிடை செய்ய பிறந்தார்கள் என்று கூறுகிறது. தாஸர்களைப்பற்றி ஷை யார்கள் சொல்வது பகவத் வாக்யத்திற்கு விரோதம். வியாஸகூடத்திற்கும் தாஸகூடத்திற்கும் எவ்வளவுதான் சர்சை இருந்தபோதிலும் மத்பக்தா யத்ர காயந்தி தத்ர திஷ்டாமிநாரத என்ற பகவத் வாக்யம் பொய்த்துப்போகுமா என்ன? ஸ்ரீபாதராயர் ஸ்ரீவியாஸராஜர் ஸ்ரீ ராகவேந்திரர் ஸ்ரீவாதிராஜர் முதலியோர் வ்யாஸகூடத்தில் ப்ரபலர்களாயிருப்பினும் தாஸகூடத்திலும் சேர்ந்தவர்களல்லவா

திருப்பதியில் முன் காலத்தில் உண்டி இல்லையாம். தேவாலயங்களில் ப்ரதிஷ்டாகாலங்களில்கூட எஜமானன் காணிக்கைசெலுத்தவேண்டுமென்கிறது. தந்திரசாரம் வீட்டில் பூஜை செய்தாலும் ஹிரண்யகர்பகர்பஸ்தம் என்ற மந்திரத்தைச் சொல்லி தக்ஷிணை ஸமர்ப்பிக்கிறோம். அதை கோயிலார் மோசம் செய்யாமல் பகவானுக்கே அது உபயோகப்பட உண்டியில் போடுகிறோம். ப்ராசீனமான இவ்வூர் அநந்தசயனம் கோயிலிலும் உண்டியல்களிருக்கின்றன.

அநந்தசயனம். இரு பண்டிதர்கள்

## மகாமக வைபவம்.

நாம் சென்ற மித்திரனில் அறிவித்தபடி நவகன்னிகையர்களின் அருளால் இவ்வருஷத்திய மகாமகம் எவ்வகை உபாதிபாதைகளன்னியில் ஜனங்களுக்கு மிகவும் உற்சாகத்தைத் தந்திருந்தது. இந்நகரிலுள்ள அநேகமாய் எல்லா தேவாலயங்களிலுமே இச்சந்தர்பத்தில் உற்சவம் நடந்து எங்கும் பகவன்மூர்த்திகளின் காக்ஷியாகவே இருந்தது. சதுர்முகன் எல்லாதேவர்களுக்கும் நடத்தும் உற்சவமானதால் அந்தந்த மூர்த்திகளில் பகவத் தேஜோவிலாஸம் ஜொலித்துக்கொண்டிருந்து பார்க்க பதினாயிரம் கண்கள் வேண்டுமென்று பக்தகோடிகளால் கொண்டாடப்பட்டுவந்தது. ஆதிகும்பேசுவரர் ஸ்ரீமங்களாம்பாளுடனும் விக்னேசுவரர், சுப்ரமண்யர், சண்டிகேசுவரர் முதலான பரிவாரகணங்களுடனும் தம் நான்கு வீதிகள் வழியாய் விசித்ர அலங்காரங்களுடன் பகல் இராத்திரி இரண்டு வேலைகளிலும் வாகனரூடராய் சேவை சாதித்து வந்தார். அப்படியே பரமஸுந்தரமூர்த்தியான ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமியும், ஸ்ரீராமஸ்வாமி, ஸ்ரீவரதராஜர், ஸ்ரீவேதநாராயணர், ஸ்ரீஆஞ்ஜனேயர் இவர்களுடன் தம் நான்கு வீதிகளில் வாகனரூடராய் சேர்வைசாதித்துக்கொண்டிருந்தார். ஸ்ரீசக்ரபாணிஸ்வாமியும் ஸ்ரீபூவராகன் ஸ்ரீகோபாலகிருஷ்ணன் இவர்களுடன் தம் நான்கு வீதிகளில் சேர்வைசாதித்துக்கொண்டிருந்தார், அப்படியே ஸ்ரீநாகேசுவரர்,



ஸ்ரீஅபிமுகேசுவரர் ஸ்ரீகாசிவிஸ்வநாதர் ஸ்ரீகௌதமேசுவரர், ஸ்ரீபாணபுரீசுவரர் இவர்களும் உற்சவ கோலங்களுடன் தம்தம் வீதிகளில் சேர்வைஸாதித்தனர். மகாமகத்தன்று விஷ்ணு மூர்த்திகள் தம்தம் உற்சவத்தை முடித்து ரதாரூடர்களாயினர். ரதோற்சவத்தை முடித்துக்கொண்டு ஸ்ரீகும்பேசுவரும், ஸ்ரீநாகேசுவரர் ஸ்ரீஸோமேசுவரர், நவகன்னிகைகளுடன் ஸ்ரீகாசிவிஸ்வநாதர், ஸ்ரீஅபிமுகேசுவரர் ஸ்ரீகௌதமேசுவரர் ஸ்ரீபாணபுரீசுவரர் இவர்கள் மகாமகஸரோவரத்தின் சுற்றிலுமுள்ள அவரவர்களின் தீர்த்தக்கரைகளில் விருஷபாரூடர்களாயிருந்து விருஷப லக்னத்தில் தீர்த்தம் கொடுத்தனர். அன்று சூரியோதயத்திற்கு முன்பு இரவு 2 மணி முதற்கொண்டே ஜனங்கள் நெருக்கடிக்கு பயந்து திரள் திரளாய் போய் மகாமகஸ்நானம் செய்துவந்தனர். சென்ற மகாமகம்போலில்லாமல் இவ்வருடம் மகாமகக்குளத்தில் ஸ்நானம் செய்ய முழங்கால்வரை ஜலம் விடப்பட்டிருந்தது மிகவும் சௌகரியமாயிருந்தது. ஜனங்களின் நெருக்கடி அதிகமாகாமலிருக்க போலீஸாரால் ஜனங்களின் போக்குவரவு நியமிக்கப்பட்டு வந்தும் சில இடங்களில் ஜனங்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாயினர். பிச்சைக்காரர்கள் தடுக்கப்பட்டிருந்ததால் சில்லரைத் திருட்டுகள் அதிகமாய் இருந்திருக்கவில்லை. பிராம்மணர்களுக்கு விசேஷமான போஜன சௌகரியங்கள் இருந்துவந்தன. ஸ்ரீமான் தேப்பெருமாநல்லூர் சிவன் ஸ்ரீசங்காசாரியார் மடத்திலும் ஸ்ரீமான் பழனி சிவன் ஸ்ரீகௌதமேசுவரர் கோவிலிலும் அன்னதானம் செய்துவந்தார்கள். ரெட்டிராயர் சத்திரத்தில் பகலிலும் அந்த தெருவிலுள்ள ராத்திரி சத்திரத்தில் இரவிலும் மாத்வர்களுக்கு. அன்புடன் அன்னமளிக்கப்பட்டுவந்தது. வேளைக்கு சுமார் 1500 பேர்கள் சாப்பிட்டுவந்தனர். ரெட்டிராயர் தர்மத்து டிரஸ்டியான ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமிராயர் அவர்களும் ராத்திரி சத்திரத்து தர்மபரிபாலனம் செய்யும் ஸ்ரீமதி ஸரஸ்வதிபாய் அம்மாளும் மிகுந்த சிரத்தையுடன் சரியானகாலத்தில் இந்த அன்னதானம் செய்துவந்தது மிகவும் போற்றத்தகுந்தது. ரெட்டிராயர் அக்கிரஹாரவீதியே இச்சந்தர்பத்தில் ஓர் போஜனசாலையாய்விளங்கியது. தவிர ஒவ்வொரு கிருஹத்திலும் அவ

ரவர்களின் இஷ்டமித்திர பந்து ஜனங்கள் ஏராளமாய் கூடியிருந்தனர். கங்காதி புண்யநதிகளும் பிரம்மாதி தேவஸமூகங்களும் கூடும் இம்மகாமக பர்வகாலம் கும்பகோணத்தில் ஒவ்வொரு கிருஹத்திலும் அவரவர்களின் கிருஹத்தில் நடைபெறும் விவாஹோற்சவமாகவே கொண்டாடப்பட்டதென்பது மிகையாகாது. மகாமகஸ்நானம் செய்து எண்ணிறைந்த சிவமூர்த்திகள் விஷ்ணு மூர்த்திகளை தரிசித்துவிட்டு ஜனங்கள் தங்கள் தங்கள் ஜன்மம் ஸார்த்தகமானதாகவே கருதி மிகுந்த குதூஹலத்துடனிருந்தனர். பன்னிரண்டுவருஷத்துக்கொருமுறை ஸம்பவிக்கும் அடுத்த மகாமகத்திற்கு இந்த பாக்யம் எப்படி ஏற்படப்போகிறதென்று சங்கித்து இவ்வருடத்திய மகாமகத்தை எவ்வளவுமட்டில் ஸார்தக்யம் செய்துகொள்ளக்கூடுமோ அப்படி பலர் ஸார்தக்யம் செய்துகொண்டனர். கும்பகோணத்திற்கு சுற்றிலுமுள்ள பஞ்சக்ரோச க்ஷேத்திர யாத்ரை, அஷ்டாதசஸ்தான யாத்ரை, கும்பகோண க்ஷேத்திரத்திலுள்ள புண்ய தீர்த்தங்களின் ஸ்நானம் மகாமக ஸரோவரத்தின் சுற்றிலுமுள்ள விம்சதீர்த்தஸ்நானம் இவைகளை விதிப்படி எண்ணிறைந்த மாத்வர்கள் செய்துகொண்டனர். முன் மகாமகத்தைவிட இவ்வாறு இவ்வருடம் செய்தவர்கள் அதிகமென்பது பலரின் அபிப்பிராயம். அதற்குக் காரணம் கும்பகோணத்தின் மகாமகிமையை ஜனங்கள் அதிகமாய் அறிந்துகொண்டதேயாகும். இம்மகாமக உற்சவத்தில் ஜனங்களின் பணத்தைப்பறிக்கவும் அதிகமான புண்யமேற்பட்டதை குறைக்கவும் ஸாதனங்களில்லாமல் போகவில்லை. எண்ணிறைந்த தமாஷாக்கள் வந்திருந்தன. நான்கு பிரஸித்தமான நாடக கம்பெனிகள், இரண்டு சினிமாக்கள், அநேக காட்டு மிருகங்களைக்கொண்ட ஒரு சர்க்கஸ் கம்பெனி, பம்பாய் கந்தர்வ உலக விசித்திரக்காக்ஷி, சுதேசி பொருட்காக்ஷி, அகில இந்திய பொருட்காக்ஷி கணக்கில்லா கடைகள், ஸ்டால்கள், ஹோட்டல்கள் முதலியவை ஜனங்களின் மனதை வெகுவாய் கவர்ந்தன. இரண்டு நாளுக்கொருதடவை ஆகாயவிமானம் கும்பகோணத்தைசுற்றி வட்டமிட்டுக்கொண்டு பொருட்காக்ஷி நோட்டீசுகளை விநியோகம் செய்துகொண்டுவந்தது. ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி சங்கராசாரி



யார் ஸ்வாமிகள் தங்கள் முழு வைபவங்களைக் காட்டிக்கொண்டு காக்ஷியளித்துவந்தார். திருவாடுதுறை பண்டாரஸன்னதியவர்களும் தங்கள் பிருதுகளுடன் விஜயம் செய்திருந்தார். கவர்ன்மெண்டாரும் முனிசிபாலிட்டியாரும் இச்சந்தர்பத்தில் செய்திருந்த ஏற்பாட்டைப்பற்றி மகிழாதார் யாருமில்லை. இந்நகரில் சமீபத்தில் எலெக்டிரிக் லைட்டுகள் ஏற்பட்டிருப்பதால் இராக்காலங்களில் இந்நகர் இந்திரலோகமாகவே காணப்பட்டது. ஆங்காங்கு முனிசிபாலிட்டியாரால் பிரயாணிகள் தங்க கீத்துக்கொட்டகைகளும் குடிஜலத்திற்கு தண்ணீர் குழாய்களும் கக்கூஸ்கள் முதலிய சௌகரியங்களும் செய்யப்பட்டிருந்தன. நகரத்தின் எல்லா பாகங்களும் சுத்தமாய் வைக்கப்பட்டிருந்தன. எல்லாவற்றையும்விட ரயில்வேயில் ஏற்படுத்தப்பட்டிருந்த சௌகரியங்கள் மிகவும் சிலாகிக்கத்தகுந்ததாயிருந்தது. பிரயாணிகளை அதிகமாய் தங்கவிடாமல் இருபது நிமிஷத்திற்கொருமுறை வண்டிகளை விட்டு ஜனங்களுக்கு மிகவும் அனுகூலம் செய்திருந்தனர். ஆடுமாடுகளைப்போல் அடைத்தும் திறந்தவண்டிகளில் உட்கார்த்திவைத்தும் பிரயாணிகளை மகாமக ஸந்தர்பத்தில் ரயில்வேயில் ஹிம்சித்துவந்த காலம்போய் ஜனங்களுக்கு பலவகையிலும் பல சௌகரியங்களை இம்மகாமகத்தில் அளித்தது எல்லோரையும் மகிழச்செய்தது. பத்துலட்சம் ஜனங்களுக்கு மேலாகவே கூடியிருந்ததாக பலர் நிஷ்கரிஷை செய்திருக்கின்றனர். இப்படியிருந்தும் ஒருவராவது காலரா முதலிய நோய்களால் பீடிக்கப்பட்டாரென்று பேச்சு இல்லை. இவ்வருடத்திய மகாமகம் சுக்ரவாரத்தன்று ஏற்பட்டதால் ஜனங்களுக்கு ஸமஸ்த ஸம்பத்துகளும் ஸகல சௌபாக்யங்களும் ஏற்பட்டிருப்பதாகவேச் சொல்லவேண்டும்.

## மாத்வமித்திரன் ஷீட் காலண்டர்

சாமானியமாய் எல்லா காலண்டர்களைப்போல் இதில் ஆங்கிலத்திலும் தமிழிலும் வருஷம் மாதம் நாள் இவைகளுடன் ஆங்கிலத்தேதிகள் குறிப்பிட்டிருப்பதுடன் இது மாத்வர்களின் ப்ரதிதினம் ஸந்தியா வந்தன ஸங்கல்பம் செய்து கொள்ள உபயோகமாயிருக்கும்படி இதில் ஸம்வத்ஸரம், அயனம்,ருது, மாஸம், மாஸத்தின் நியாமகமூர்த்தி, திதி, வாஸ

இவைகள் வியக்தமாய் போடப்பட்டிருக்கிறது. அந்தந்த தேதியின் கீழே சிராத்தத்திற்குறிய திதி இன்னது என்பதை ப்ரதமையாயிருந்தால் 1 த்விதியாயிருந்தால் 2 த்ருதியை சதுர்த்தி திதித்வயமாயிருந்தால் 3–4 என்றும் சூன்யமாயிருந்தால் சூன்யமென்றும் வியக்தமாயும் போடப்பட்டிருக்கிறது. பஞ்சாங்கத்தைப்பார்த்து சிராத்தத்திற்குறிய திதி இன்ன தேதி என்று நிஷ்கரிஷையாய் சொல்லும் ஆசாரியர்கள் அநேக ஊர்களில் கிடைப்பதில்லை யாதலால் இந்த மாத்வமித்திரன் காலண்டர் மாத்வர்களுக்கு இன்றிமையாதது. மற்றும் கிருத்திகை உபவாஸம், ஷஷ்டி உபவாஸம், ஸப்தமி வ்ருதம், சதுர்த்திவ்ரதம், சிரவண உபவாஸம், ஏகாதசி உபவாஸம், தசமிஹரிவாஸரம், த்வாதசி ஸாதனி ஹரிவாஸரம், விஷ்ணுபஞ்சக உபவாஸம் கோகுலாஷ்டமி பாரணைகாலம், ஸரஸ்வதி பூஜாதிகாலங்கள் விரதங்களின் தினங்கள் ஸ்ரீஉத்ராதிமடம் ஸ்ரீவியாஸராஜமடம், ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடம் இந்த மூன்று மடங்களில் இன்னின்ன மடத்து இன்னின்ன ஸ்வாமிகளின் புண்யதினம் என்ற குறிப்புகள், பிரஸித்த தாஸர்மார்களின் புண்ய தினங்கள் முதலிய எண்ணிறைந்த விஷயங்களடங்கியிருக்கின்றன. இவ்வருடம் நாமே இதை வேறிடத்தில் அச்சுப்போட நேர்ந்ததால் இதன் கிரயம் சந்தாதாரர்கள் சந்தாதாரர்களல்லாதார் எல்லோருக்குமே பிரதி 1க்கு அணா 2 தான். தபாற் கூலி 0—0—6 டஜன் கணக்காய் வாங்க முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு டஜன் 1க்கு ரூ. 1—4—0 வீதம் கொடுக்கப்படும். தபாற் கூலி வேறு.

## விசேஷதினங்கள்.

---

### வைசாகமாஸம்.

| | | |
|---|---|---|
| 27—4—33 | குருவாரம் | அக்ஷயத்ருதியை புண்யகாலம் |
| 29—4—33 | சனிவாரம் | லாவண்ய கௌரீவ்ரதம். |
| 6—5—33 | சனிவாரம் | ஏகாதசி உபவாஸம் |
| 7—5—33 | பானுவாரம் | த்வாதசி ஸாதனி மணி 7—43 க்குள் பாரணை, ப்ரதோஷவிரதம். |
| 8—5—33 | சோமவாரம் | நரஸிம்ம ஜயந்தி |
| 9—5—33 | மங்களவாரம் | பௌர்ணமி, ஸம்பத் கௌரீவ்ரதம். வைசாகஸ்நானம் பூர்த்தி. தத்யோதன தானம் உதகும்பதானம். |
| 10—5—33 | புதவாரம் | ஸப்தஸ்தானம். |
| 16—5—33 | மங்களவாரம் | சிரவணம் உப இல்லை. விஷ்ணுபஞ்சக உப இல்லை. |
| 20—5—33 | சனிவாரம் | ஏகாதசி உபவாஸம் |
| 23—5—33 | மங்களவாரம் | கிருத்திகோபவாஸம். அமாவாசை, திலதர்பணம். |
| 24—5—33 | புதவாரம் | விஷ்ணுப உபவாஸம். |